வருடாந்த அறிக்கை

2021

NMRA
NATIONAL MEDICINES REGULATORY AUTHORITY

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை (NMRA)
இல. 120, நொரிஸ் கனேல் வீதி, கொழும்பு 10.

உள்ளடக்க அட்டவணை

பக்க இல.

தற்போதைய தலைவரின் செய்தி 4

தற்போதைய பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் செய்தி 5

பணிப்பாளர் சபை - 2021 6

அத்தியாயம் 1 – நிறுவனத் தகவல்கள் / நிறைவேற்றுப் பொழிப்பு 7

1.1 அறிமுகம் 7

1.2 அதிகாரசபையின் தூரநோக்கு, செயற்பணி, குறிக்கோள்கள் 9

1.2.1 அதிகாரசபையின் தூரநோக்கு 9

1.2.2 அதிகாரசபையின் செயற்பணி 9

1.2.3 அதிகாரசபையின் குறிக்கோள்கள் 9

1.3 பிரதான தொழிற்பாடுகள் 10

1.4 NMRA இன் பிரிவுகள் 11

1.4.1 தேசிய மருந்துகள் தர உத்தரவாத ஆய்வுகூடம் (NMQAL) 11

1.4.1.1 அறிமுகம் 11

1.4.1.2. NMQAL இன் பிரிவுகளின் பட்டியல் 12

1.4.1.3. NMQAL இன் பிரதான தொழிற்பாடுகள் 12

1.4.2 மருந்துகள் ஒழுங்குபடுத்தல் பிரிவு 13

1.4.2.1 அறிமுகம் 13

1.4.2.2 மருந்துகள் ஒழுங்குபடுத்தல் பிரிவின் நிறுவனக் பட்டியல் 13

1.4.2.3 மருந்துகள் ஒழுங்குபடுத்தல் பிரிவின் தொழிற்பாடுகள் 14

1.4.3 நிதிப் பிரிவு 14

1.4.3.1 அறிமுகம் 14

1.4.3.2 நிதிப் பிரிவின் பட்டியல் 14

1.4.3.3 நிதிப் பிரிவின் தொழிற்பாடுகள் 15

1.4.4 நிர்வாகப் பிரிவு 15

1.4.4.1 அறிமுகம் 15

1.4.4.2 நிர்வாகப் பிரிவின் பட்டியல் 15

1.4.4.3 நிர்வாகப் பிரிவின் தொழிற்பாடுகள் 16

1.4.5 சட்டப் பிரிவு 16

1.4.5.1 அறிமுகம் 16

1.4.5.2 சட்டப் பிரிவின் பட்டியல் 17

1.4.5.3 சட்டப் பிரிவின் பிரதான தொழிற்பாடுகள் 17

1.4.6 களப்பரிசோதனை மற்றும் அமுலாக்கல் பிரிவு 18

1.4.6.1 அறிமுகம் 18

1.4.6.2களப்பரிசோதனை மற்றும் அமுலாக்கல் பிரிவு பட்டியல் 19

பக்க இல.

1.4.6.3 களப்பரிசோதனை மற்றும் அமுலாக்கல் பிரிவின் செயல்பாடுகள். 19
1.4.7 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) பிரிவு 20
1.4.7.1 அறிமுகம் 20
1.4.7.2 ICT பிரிவின் பகுதிகளின் பட்டியல் 20
1.4.8 மனித வளப் பிரிவு 21
1.4.8.1 அறிமுகம் 21
1.4.8.2 மனித வளப் பிரிவின் பட்டியல் 21
அத்தியாயம் 2 – செயல்முன்னேற்றம் மற்றும் தூரநோக்கு 22
2.1 தேசிய மருந்துகள் தர உத்தரவாத பிரிவின் (NMQAL) செயல் முன்னேற்றம்.. 22
2.2 மருந்துகள் ஒழுங்குபடுத்தல் பிரிவின் செயல் முன்னேற்றம் 24
2.2.1 மருந்துகள் ஒழுங்குபடுத்தல் பிரிவு 24
2.2.2 மருத்துவ சாதனங்கள் ஒழுங்குபடுத்தல் பிரிவு 28
2.2.3 அழகுசாதனப் பொருட்கள் ஒழுங்குபடுத்தல் பிரிவு 29
2.2.4 எல்லைக்கோட்டு பொருட்கள் ஒழுங்குபடுத்தல் பிரிவு 30
2.2.5 உற்பத்தி ஒழுங்குபடுத்தல் பிரிவு (ஆகுசுனு) 31
2.2.6 விலையிடல் பிரிவு 32
2.2.7 பரீட்சார்த்த சிகிச்சை ஒழுங்குபடுத்தல் பிரிவு 32
2.2.8 மருந்தக கண்காணிப்புப் பிரிவு 34
2.2.9 2021 இல் ஆசுயு இன் தகவல், கல்வி, தொடர்பாடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவால் நடத்தப்பட்ட பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் 36
2.3 களப்பரிசோதனை மற்றும் அமுலாக்கல் பிரிவின் (IED) செயல் முன்னேற்றம்.. 38
2.4 நிதிப் பிரிவின் செயல் முன்னேற்றம் 44
2.5 நிர்வாகப் பிரிவின் செயல் முன்னேற்றம் 44
2.6 சட்டப் பிரிவின் செயல் முன்னேற்றம் 45
2.7 மனித வளப் பிரிவின் செயல் முன்னேற்றம் 49
அத்தியாயம் 3 – ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றல 53
அத்தியாயம் 4 – நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் அடையப்படுதல் செயலாற்றல் (SDG) 102
அத்தியாயம் 5 - இணக்கப்பாட்டு அறிக்கை 104

சுறுக்க எழுத்துக்களின் விபரப் பட்டியல்

BPEC	எல்லைக்கோட்டு உற்பத்திகள் மதிப்பீட்டுக் குழு
CDD Act	ஒப்பனை, சாதனங்கள் மற்றும் மருந்துகள் சட்டம்
CFDI	தலைமை உணவு மற்றும் மருந்து பரிசோதகர்
DO	அபிவிருத்தி உத்தியோகத்தர்
FDI	உணவு மற்றும் மருந்து பரிசோதகர்
GDP	சிறந்த விநியோக நடைமுறைகள்
GLP	சிறந்த ஆய்வகூட நடைமுறைகள்
GMP	சிறந்த உற்பத்தி நடைமுறைகள்
GPP	சிறந்த மருந்தியல் நடைமுறைகள்
ICT	தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்
ID Card	அடையாள அட்டை
IED	களப்பரிசோதனை மற்றும் அமுலாக்கல் பிரிவு
ISO	சர்வதேச தரநியமங்கள் அமைப்பு
IT	தகவல் தொழில்நுட்பம்
KKS	அலுவலக உதவியாளர்
MA	முகாமைத்துவ உதவியாளர்
MDEC	மருத்துவ சாதனங்கள் மதிப்பீட்டுக் குழு
MEC	மருந்துகள் மதிப்பீட்டுக் குழு
NDDCB	தேசிய ஆபத்தான மருந்துகள் கட்டுப்பாட்டு சபை
NDQAL	தேசிய மருந்துகள் தர உத்தரவாத ஆய்வுகூடம்
NMQAL	தேசிய ஔடதங்கள் தர உத்தரவாத ஆய்வகம்
NMRA	தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை
PV	மருந்தக கண்காணிப்புப
SCCT	சிகிச்சை பரீட்சார்த்த உப குழு
SDG	நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்
SSFFC	தரக்குறைவான/தூய்மையற்ற/தவறாக-பெயரிடப்பட்ட/தவறான/போலி
TRIPS	புலமைச் சொத்து உரிமைகளின் வர்த்தகம் தொடர்பான அம்சங்கள்
UNDP	ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்
WD	மீளப்பெறுதல்
WH	நிறுத்திவைத்தல்
WHO	உலக சுகாதார நிறுவனம்

தற்போதைய தலைவரின் செய்தி

சுகாதார அமைச்சின் சுயாதீன அமைப்பான தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் 2022 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையை வழங்குவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இலங்கையில் தேசிய மருத்துவக் கொள்கையைப் பின்பற்றுவதன் மூலம் பொதுமக்களுக்கு அனைத்து வகையான மருந்துகள், மருத்துவ சாதனங்கள், எல்லைக்கோட்டுப் பொருட்கள் மற்றும் அழகுசாதனப் பொருட்களின் தரம், பாதுகாப்பு, வினைத்திறன் மற்றும் நியாயமான விலையை உறுதிப்படுத்துதல் அதிகாரசபையின் முக்கிய பணியாகும்.

உட்கட்டமைப்பு வசதிகள் இல்லாமை மற்றும் விசேடமாக போதிய மனித வளம் காணப்படாமை போன்ற பல சவால்களுக்கு மத்தியிலும் நாட்டில் பயன்படுத்தப்படும் மருந்துகள், மருத்துவ சாதனங்கள், எல்லைக்கோட்டுப் பொருட்கள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் ஆகியவற்றின் அனைத்து அம்சங்களையும் வினைத்திறமையான, பயனுள்ள மற்றும் மிகவும் வெளிப்படையான முறையில் ஒழுங்குபடுத்துவதற்கு தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைக்கு முடிந்திருந்தது. தேசிய மருந்துகளின் தர உறுதி ஆய்வகத்தைக் கொண்டிருப்பதில் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை பெருமிதம் கொள்வதுடன், இது தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்ட முதன்மை ஆய்வகமாகும். இந்த ஆய்வகம் மருத்துவ தயாரிப்புகள் தேவையான தர நியமங்களுடன் இணங்குகிறதா என்பதைக் கண்டறிய தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைக்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்குகிறது.

2015 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையானது 2017 ஆம் ஆண்டளவில் நிதி ரீதியாக ஸ்திரமானதாகவும், பொது திறைசேரியிலிருந்து எந்தவொரு நிதி ஒதுக்கீடும் இன்றி சுயாதீனமாக செயற்படுவதற்கும் ஒட்டுமொத்த ஊழியர்கள் வழங்கிய அர்ப்பணிப்புக்கு எனது மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன். மருந்து விற்பனை நிலையங்கள் மற்றும் பிற தொடர்புடைய தயாரிப்புகளுக்கான சான்றிதழ்கள் மற்றும் உரிமங்களை வழங்குவதை மிகவும் வினைத்திறனாக்குவதற்கு கணனி முறைமைப்படுத்திய வலைப்பின்னலை ஏற்படுத்த ஏற்கனவே பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இது நாட்டின் சுகாதார துறையின் தரம் மற்றும் செயலாற்றலை நேரடியாக மேம்படுத்தும் என்று நான் நம்புகிறேன்.

பிரதான நிறைவேற்று அதிகாரியின் தலைமையின் கீழ், தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைக்கு பொருத்தமான தகுதி வாய்ந்த அதிகாரிகளை ஆட்சேர்ப்பதற்கும், பணியாளர் திருப்தி மற்றும் மனித வளத்தை புத்திசாலித்தனமாக மேம்படுத்துவதன் மூலம் நிறுவனத்தின் இலக்குகளை அடைவதற்காக ஊழியர்களுக்கு வழிகாட்டவும் நான் எதிர்பார்க்கிறேன்.



பேராசிரியர் எஸ் டி ஜெயரத்ன
துலைவர்
தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை

தற்போதைய பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் செய்தி

தென்கிழக்கு ஆசியாவில் வேகமாக வளர்ந்து வரும் மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுக்களில் ஒன்றான NMRA இனது பிரதான நிறைவேற்று அதிகாரி என்ற வகையில், 2022 ஆம் ஆண்டிற்கான அதனது வருடாந்திர அறிக்கையை வழங்குவதில் நான் பெருமிதம் கொள்கிறேன். நாம் ஆரம்பத்தில் இருந்தே எமது முயற்சிகள் அனைத்துக்கும் விலைமதிப்பற்ற பின்புல பலமாக காணப்பட்ட எங்களது தூரநோக்கு, செயற்பணி மற்றும் இலக்குகளை அங்கீகரித்து, புரிந்துகொண்டு, எங்கள் குழு உறுப்பினர்கள் மத்தியில் அவற்றை பகிர்ந்து கொண்டோம்.

இந்த ஆண்டும், NMRA அதன் ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகள் மூலம் அதன் வருமானத்தில் கணிசமான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. இந்த வளர்ச்சியானது திறைசேரி நிதியிலிருந்து சுயாதீனமாக மாறுவதற்கு மிகவும் பங்களித்துள்ளதுடன், இது ஒரு மருந்து ஒழுங்குபடுத்துனரை WHO ஆல் அங்கீகரிக்கப்படுவதற்கான முக்கிய தகுதியாக காணப்படுகின்றது.

அதிகாரசபையின் விற்பனை புரள்வானது பிரதானமாக செயலாக்கக் கட்டணம், பதிவுசெய்தல், மாதிரி உரிமம், இறக்குமதி உரிமம், உற்பத்தி உரிமம் மற்றும் மருத்துவ சாதனங்கள் மற்றும் மருந்துகளின் தற்காலிக மற்றும் முழு பதிவு வருமானம் ஆகியவற்றில் தங்கியுள்ளது.

இந்த வருடத்திலும், இலங்கையின் பொது திறைசேரியின் பங்களிப்பு இல்லாமல் அதிகாரசபையால் கணிசமான வருமானம் பதிவு செய்யப்பட்டது. மேலும், தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையால், பொது திறைசேரிக்கு திறைசேரி தீர்வையாகவும், அதன் நிகர வருமானத்தின் மீதான வருமான வரியாகவும் பங்களிக்க முடிந்ததையிட்டு நான் மிகவும் பெருமைப்படுகிறேன்.

அதிகாரசபையின் யாப்பியல் ரீதியான கட்டமைப்பை வலுப்படுத்துவதே எமது அமைப்பின் எதிர்காலத்திற்கான மூலோபாய இலக்கு என்பதை நாங்கள் அடையாளம் கண்டுள்ளோம். செயற்பாட்டு உற்பத்தித்திறன், நிதி செயலாற்றல் மற்றும் சுதந்திரத்தை மேம்படுத்துதல், மனித மூலதனத்தை மேம்படுத்துதல் மற்றும் தகவல் தொழில்நுட்ப முறைமைகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சமீபத்திய நுட்பங்களை பயன்படுத்துவதன் மூலம் அந்த இலக்கை அடைவதற்கு நான் முழுமையாக உறுதிபூண்டுள்ளேன்.



கலாநிதி விஜித் குணசேகர

பிரதான நிறைவேற்று அதிகாரி

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை

பணிப்பாளர் சபை - 2021

1. கலாநிதி ரசித இந்துல விஜேவந்த (தலைவர்)
2. கலாநிதி சவீன் செமகே (பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்)
3. பேராசிரியர் சிசிர சிறிபத்தன
4. கலாநிதி அசேல குணவர்தன (DGHS)
5. கலாநிதி ஆனந்த விஜேவிக்ரம
6. செல்வி.கே.சஜீவனி தயாரத்ன
7. கலாநிதி நிஸ்ஸங்க ஜயவர்தன
8. கலாநிதி சனத் லானெரோல்
9. திருமதி.டபிள்யூ.எம்.ஜி.எம். விஜேசூரிய
10. பேராசிரியர் சுதீரா ஜெயசிங்க
11. கலாநிதி செவ்வந்தி சுபசிங்க
12. திரு.ராஜா குணரத்ன

அத்தியாயம் 1

நிறுவனத் தகவல்கள் / நிறைவேற்றுப் பொழிப்பு

1.1 அறிமுகம்

தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணைக்குழு (NMRA) என்பது அனைத்து வகையான மருந்துகள், மருத்துவ சாதனங்கள் மற்றும் எல்லைக்கோட்டு உற்பத்திகளை ஒழுங்குபடுத்துவதற்காக இலங்கையில் நிறுவப்பட்ட ஒரேயொரு அரச நிறுவனமாகும். மேலும், நாட்டில் விற்பனை செய்யப்படும் அனைத்து மருந்துப் பொருட்களின் தரம், செயல்திறன் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்து அவை பொதுமக்களுக்கு மலிவான விலையில் கிடைக்கச்செய்யும் பொறுப்பு அதற்குள்ளது.

நாட்டிற்குள் விநியோகிக்கப்படும் அனைத்து வகையான மருந்துகள், மருத்துவ சாதனங்கள் மற்றும் அழகுசாதனப் பொருட்களை ஒழுங்குபடுத்துவதற்கான சட்டக் கட்டமைப்பானது 1980 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க அழகுசாதனப் பொருட்கள், சாதனங்கள் மற்றும் மருந்துகள் சட்டம் (CDD சட்டம்) மற்றும் 1984 ஆம் ஆண்டின் CDD ஒழுங்குபடுத்தல்கள் மற்றும் 1980 இல் இருந்து 2015 யூலை வரை அதற்காக மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களால் வழங்கப்பட்டுள்ளது. மேலும், தேசிய மருந்துகள் மருந்துக் கொள்கையானது CDD சட்டத்திலிருந்து உருவாக்கப்பட்டு 2007 இல் அமைச்சரவையால் ஒப்புதல் வழங்கப்பட்டது. 2015 இல், 2015 இன் 5 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைச் சட்டம் (NMRA சட்டம்) நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

NMRA சட்டத்தின்படி, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை (NMRA) 2015 மார்ச் இல் நிறுவப்பட்டதுடன் சுகாதார அமைச்சகத்தின் கீழ் ஒரு அரை-அரசு அமைப்பாக 2015 யூலை 01 முதல் செயற்படத் தொடங்கியது. ஆசுயு சட்டத்தின் கீழ், ஆசுயு ஒரு சுயாதீனமான அதிகாரமாக செயல்படுகிறது மேலும், இலங்கையில் உள்ள நோயாளிகளுக்குரிய அனைத்து மருந்துப் பொருட்களின் பாதுகாப்பு, தரம், செயல்திறன் மற்றும் அவை கிடைக்கச் செய்தல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு சொந்த தீர்மானங்களை அதற்கு எடுக்க முடியும்.

அதன்படி, NMRA இன் தொழிற்பாடுகள் சீராக நடைபெறுவதை உறுதி செய்வதற்காக பின்வரும் பிரிவுகள் நிறுவப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளன.

- தேசிய மருந்துகள் தர உறுதி ஆய்வுகூடம் (NMQAL)
- மருந்து ஒழுங்குபடுத்தல் பிரிவு
- நிதிப் பிரிவு

- நிர்வாகப் பிரிவு
- மனித வளப் பிரிவு
- சட்டப் பிரிவு
- களப்பரிசோதனை மற்றும் அமுலாக்கல் பிரிவு
- ICT பிரிவு

மேலும், தீர்மானமெடுத்தல் செயல்முறைக்கு உதவுதற்காக, தொடர்புடைய துறைகளில் நிபுணத்துவம் பெற்ற பல குழுக்கள் உள்ளன;

- மருந்துகள் மதிப்பீட்டுக் குழு (MEC)
- மருத்துவ சாதன மதிப்பீட்டுக் குழு (MDEC)
- மருத்துவ பரிசோதனைகளின் உப குழு (SCCT)
- ஒப்பனைப்பொருள் மதிப்பீட்டுக் குழு (CEC)

நாட்டில் கிடைக்கின்ற அனைத்து மருத்துவத் தயாரிப்புகளின் பாதுகாப்பு, தரம் மற்றும் செயல்திறனை உறுதி செய்வதற்காக மருந்துகள், மருத்துவ சாதனங்கள், எல்லைக்கோட்டு உற்பத்திகள், மருத்துவ பரிசோதனை பொருட்கள் மற்றும் அழகுசாதனப் பொருட்களை மதிப்பீடு செய்வது அந்தக் குழுக்கள் அனைத்தினதும் பொறுப்பாகும்.

மேலும், அந்த மருந்துப் பொருட்கள் அனைத்தும் பொதுமக்களுக்கு மலிவு விலையில் கிடைப்பதை உறுதி செய்வதற்காக சந்தை விலையை ஒழுங்குபடுத்துவதற்காக விலைக் குழு காணப்படுகின்றது.

அத்துடன், NMRA சட்டம் செயல்படுத்தப்படுவதை மேற்பார்வை செய்வதற்காக பொதுமக்களுக்காக மேன்முறையீட்டுக் குழு மற்றும் ஆலோசனைக் குழு என்பன அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், சிறந்த உற்பத்தி நடைமுறைகள் (GMP), சிறந்த விநியோக நடைமுறைகள் (GDP) மற்றும் சிறந்த மருந்தியல் நடைமுறைகள் (GPP) ஆகியவற்றை சட்டத் தேவைப்பாடுகளாக NMRA உறுதி செய்கிறது.

1.2 அதிகாரசபையின் தூரநோக்கு, செயற்பணி குறிக்கோள்கள்

1.2.1 அதிகாரசபையின் தூரநோக்கு

"தரமான மருந்துகள் மற்றும சுகாதார பராமரிப்பு கிடைப்பதனை மேம்படுத்தல்"

1.2.2 அதிகாரசபையின் செயற்பணி

"நோயாளிகளின் நலனுக்காக மருந்துகள் மற்றும் சுகாதார பராமரிப்புப் பொருட்களின் பாதுகாப்பு, தரம் மற்றும் அவற்றின் செயல்திறனை உறுதி செய்வதற்காக ஒழுங்குபடுத்தல் மேற்பார்வை மற்றும் சான்றுகளின் அடிப்படையிலான தீர்மானங்களை வழங்குதல்"

1.2.3 அதிகாரசபையின் குறிக்கோள்கள்

அ) பயனுள்ள, பாதுகாப்பான மற்றும் சிறந்த தரமான மருந்துகள், பயனுள்ள, பாதுகாப்பான மற்றும் சிறந்த தரமான மருத்துவ சாதனங்கள் மற்றும் பயனுள்ள, பாதுகாப்பான மற்றும் சிறந்த தரமான எல்லைக்கோட்டு உற்பத்திப்பொருட்கள் பொதுமக்களுக்கு மலிவான விலையில் கிடைப்பதை உறுதி செய்தல்;

ஆ) பதிவுசெய்தல், உரிமம் வழங்குதல், பதிவை அல்லது உரிமத்தை இரத்துச்செய்தல், விலை நிர்ணயம், உற்பத்தி, இறக்குமதி, களஞ்சியப்படுத்தல், போக்குவரத்து, விநியோகம், விற்பனை, விளம்பரம் மற்றும் மருந்துகள், மருத்துவ சாதனங்கள் மற்றும் எல்லைக்கோட்டுப் பொருட்களை அகற்றுதல் ஆகியவற்றுடன் தொடர்புடைய அனைத்து விடயங்களுக்கும் மத்திய ஒழுங்குபடுத்துனராக செயல்படுதல்;

இ) மருந்துகள், மருத்துவ சாதனங்கள், எல்லைக்கோட்டு பொருட்கள் மற்றும் மருத்துவப் பொருட்களின் புலனாய்வு ஆகியவற்றின் பதிவு, உரிமம் மற்றும் இறக்குமதி தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் வெளிப்படையான, நிலைபேறான மற்றும் சமத்துவமான முறையில் மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்தல்;

ஈ) அத்தியாவசிய மருந்துகள் மலிவான விலையில் கிடைப்பதை உறுதி செய்யும் நோக்குடன் சிறந்த தரமான மருந்துகள் இலங்கையில் உற்பத்தி செய்வதை ஊக்குவித்தல்;

உ) சுகாதார நிபுணர்கள் மற்றும் நுகர்வோர் ஊடாக மருந்துகள், மருத்துவ சாதனங்கள் மற்றும் எல்லைக்கோட்டு தயாரிப்புகளின் பாதுகாப்பான மற்றும் பகுத்தறிவுப் பயன்பாட்டை ஊக்குவித்தல்;

ஊ) மருந்துகள், மருத்துவ சாதனங்கள் மற்றும் எல்லைக்கோட்டு தயாரிப்புகளுடன் தொடர்புடைய சட்டங்களுக்கு பொருத்தமான திருத்தங்களை பரிந்துரைத்தல்;

எ) மருந்துகள், மருத்துவ சாதனங்கள் மற்றும் எல்லைக்கோட்டு தயாரிப்புகள் குறித்து பொதுமக்கள், சுகாதாரப் பாதுகாப்பு நிபுணர்கள் மற்றும் அனைத்து ஆர்வமுள்ள தரப்பினர்களையும் அறிவுறுத்துதல்;

ஏ) மருந்துகள், மருத்துவ சாதனங்கள் மற்றும் எல்லைக்கோட்டு தயாரிப்புகளின் விளம்பரம் மற்றும் சந்தைப்படுத்துதலை ஒழுங்குபடுத்துதல்;

ஐ) மருந்துகள், மருத்துவ சாதனங்கள் மற்றும் எல்லைக்கோட்டு தயாரிப்புகள் கிடைப்பதை ஒழுங்குபடுத்துதல்;

ஒ) மருந்துகள், மருத்துவ சாதனங்கள் மற்றும் எல்லைக்கோட்டு தயாரிப்புகளின் தரம், பாதுகாப்பு மற்றும் பாதகமான எதிர்விளைவுகள் குறித்து சந்தைப்படுத்தலுக்குப் பிந்தைய கண்காணிப்பை நடத்துதல்; மற்றும்

ஓ) இலங்கையில் மருத்துவ பரிசோதனைகள் நடத்துவது தொடர்பான அனைத்து விடயங்களையும் ஒழுங்குபடுத்துதல்.

1.3 பிரதான தொழிற்பாடுகள்

- புதிய மருந்துகள், மருத்துவ சாதனங்கள் மற்றும் எல்லைக்கோட்டு உற்பத்திப் பொருட்களை பதிவுசெய்தல்
- சந்தையில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட உற்பத்திப் பொருட்களின் மாற்றங்களை ஒழுங்குபடுத்துதல்
- சிறந்த உற்பத்தி நடைமுறைகளை மேற்பார்வையிட்டு அமுல்படுத்துதல்
- சந்தை மற்றும் விளம்பரங்களிலுள்ள மருத்துவப் பொருட்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துதல்
- பரீட்சார்த்த சிகிச்சையளிப்பை ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வையிடல்
- மருத்துவப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்காக சிறந்த உற்பத்திப் பொருட்களிற்கு சான்றிதழ் வழங்குதல்
- சிறந்த மருந்தக நடைமுறைகளை அமல்படுத்துதல்
- சந்தையிலுள்ள மருத்துவப் பொருட்களை பரிசோதித்தல் மற்றும் சட்டத்தை அமுல்படுத்துதல்

1.4 NMRA இன் பிரிவுகள்

NMRA இன் சீரான தொழிற்பாட்டிற்காக பின்வரும் பிரிவுகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன

1. தேசிய மருந்துகள் தர உறுதிப்படுத்தல் ஆய்வுகூடம் (NMQAL)
2. மருந்தக ஒழுங்குபடுத்தல் பிரிவு
3. நிதிப் பிரிவு
4. நிர்வாகப் பிரிவு
5. சட்டப் பிரிவு
6. களப்பரிசோதனை மற்றும் அமுலாக்கல் பிரிவு
7. ICT பிரிவு
8. மனித வளப் பிரிவு

1.4.1 தேசிய மருந்துகள் தர உறுதிப்படுத்தல் ஆய்வுகூடம் (NMQAL)


1.4.1.1 அறிமுகம்

தேசிய மருந்துகள் தர உறுதிப்படுத்தல் ஆய்வுகூடம் (NDQAL) என்பது அழகுசாதனப் பொருட்கள், சாதனங்கள் மற்றும் மருந்துகளை பரிசோதிப்பதற்காக இலங்கையில் நிறுவப்பட்ட தேசிய ஆய்வகமாகும். இது இலங்கையில் கிடைக்கும் மேற்குறிப்பிட்ட தயாரிப்புகளின் தரம், பாதுகாப்பு மற்றும் செயல்திறனை உறுதி செய்யும் நோக்குடன் நோர்வே ஆலோசனைகள் மற்றும் NORAD நிதி உதவியுடன் 1980 இன் 27 ஆம் இலக்க அழகு சாதனங்கள் மற்றும் மருந்துச் சட்டத்தின் கீழ் இது 1990 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை (NMRA) 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கீழ் 2015 யூலை 01 இல் நிறுவப்பட்டதுடன் அதுவரை சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கி வந்த தேசிய மருந்துகள் தர உத்தரவாத ஆய்வுகூடம் (NDQAL) அதிகாரசபையின் கீழ் கொண்டுவரப்பட்டது. எனவே, தற்போது NDQAL ஆனது NMRA இன் கீழ் இயங்கிவருவதுடன் இந்த ஆய்வகமானது தேசிய மருந்துகள் தர உறுதிப்படுத்தல் ஆய்வுகூடம் (NMQAL) என மீளப் பெயரிடப்பட்டுள்ளது.

NMQAL இன் முக்கிய பிரிவுகளாக இரசாயணம், நுண்ணுயிரியல், உயிரியல், குறிப்பான நியமங்கள் மற்றும் அளவுத்திருத்தம் மற்றும் சாதனங்கள் என்பன காணப்படுகின்றன. தரமான பாதுகாப்பான மற்றும் செயல்திறனான மதிப்பீட்டின் போது நியம மருந்தியல் மற்றும் பிற ஏற்றுக்கொள்ளப்பட்ட (அங்கீகரித்த) பரிசோதனை நடைமுறைகளை NMQAL பின்பற்றுகிறது. தேவைப்படும் போது சூழ்நிலைகளிற்கேற்ப அங்கீகரிக்கப்பட்ட ஆய்வாளராக NMQAL செயல்படுகிறது.

1.4.1.2 NMQAL இன் பிரிவுகளின் பட்டியல்:



*Note: due to lack of qualified staff following amendments were made to approved organization Structure.

1. Biological tests are not carried out at present.
2. Staff of former Biological, Ref. Std &Calibration, Devices and Cytosis Division are merged temporarily under the name of 'Biological Division'. Accordingly, Chemical Tests, Physical Tests, Particulate Matter Tests are conducted by this division.

1.4.1.3 NMQAL இன் பிரதான தொழிற்பாடுகள்

தேசிய மருந்துகள் தர உத்தரவாத ஆய்வகம் (NMQAL) ஆனது மருந்துகள், மருத்துவ சாதனங்கள், எல்லைக்கோட்டு உற்பத்திகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் ஆகியவற்றில் தர உத்தரவாத முறைமையை இயக்குவதற்குத் தேவையான தொழில்நுட்ப உதவியை வழங்குகிறது. தயாரிப்புகளின் தரம், பாதுகாப்பு மற்றும் செயல்திறன் தேவைப்பாடுகளுடன் இணங்குவதைத் தீர்மானிக்க தேவையான ஆய்வக சோதனைகளை நடத்துவதே NMQAL இன் முதன்மை செயல்பாடாகும். NMQAL இன் தொழிற்பாடுகளாவன;

- விநியோகச் சங்கிலியின் வெவ்வேறு மட்டங்களிலுள்ள உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகள், மருத்துவ சாதனங்கள், எல்லைக்கோட்டு உற்பத்திகள் மற்றும் அழகுசாதனப் பொருட்களின் (சந்தைப்படுத்தலுக்கு முந்தைய மற்றும் சந்தைப்படுத்தலுக்குப் பிந்தைய நிலைகள்) பகுப்பாய்வு. பதிவு மாதிரிகள், முறைப்பாட்டு மாதிரிகள், கேள்விகோரல் மாதிரிகள், ஏற்றுமதிக்கு முந்தைய மாதிரிகள், விநியோகத்திற்கு முந்தைய மாதிரிகள் மற்றும் நீதிமன்ற மாதிரிகள் என பகுப்பாய்வுக்கான மாதிரிகள் சமர்ப்பிக்கப்படுகின்றன. மேலும், அரசு மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து கண்காணிப்பு மாதிரிகள் சேகரிக்கப்படுகின்றன.
- மருந்துகள், மருத்துவ சாதனங்கள் மற்றும் எல்லைக்கோட்டு தயாரிப்புகளின் பதிவுக்கான மதிப்பீடு குறித்த தொழில்நுட்ப ஆலோசனைகளை தேவைப்படும்போது வழங்குதல்.


- GMP களப்பரிசோதனைகளில் பங்கேற்றல்
- வெளிவாரி தர உத்தரவாத மதிப்பீட்டு திட்டத்தில் (திறமை பரிசோதனை) பங்கேற்றல்
- தர உத்தரவாத முறைமை குறித்த பயிற்சித் திட்டங்களை நடத்துதல்
- NMRA ஆல் தீர்மானிக்கப்பட்ட படி அவற்றின் சேவைகள் அவசியமானதாகக் கருதப்படும்போது, உள்நாட்டில் அல்லது வெளிநாட்டிலுள்ள ஆய்வகங்களுடன் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துதல்.

1.4.2 மருந்தக ஒழுங்குபடுத்தல் பிரிவு

1.4.2.1 அறிமுகம்

இது NMRA இன் பிரதான செயல்பாடுகளில் ஒன்றாக அடையாளம் காணப்படுவதோடு, பொதுமக்களுக்கு மலிவு விலையில் மருத்துவப் பொருட்கள் கிடைப்பதற்கும் அழகுசாதனப் பொருட்களின் பாதுகாப்பு, செயல்திறன் மற்றும் தரத்தை உறுதி செய்வதற்குமான பொறுப்பாகும். அதன்படி, மருந்துப் பொருட்களைப் பயன்படுத்தும் நோயாளிகளின் நலன்களைப் பாதுகாப்பதற்காக இலங்கைக்குள் பயன்படுத்தப்படும் மருந்துகள், மருத்துவ சாதனங்கள் மற்றும் எல்லைக்கோட்டு தயாரிப்புகளை ஒழுங்குபடுத்துவதில் இப்பிரிவு ஈடுபட்டுள்ளது. மேலும் மருந்து உற்பத்தி தளங்கள் மற்றும் தீவு முழுவதும் உள்ள மருந்தகங்களை ஒழுங்குபடுத்துவதில் NMRA ஈடுபட்டுள்ளது. மருந்துகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய தயாரிப்புகளினால் ஏற்படுகின்ற பாதகமான விளைவுகளைக் குறைப்பதற்காக மருந்தக கண்காணிப்பு என்பது மற்றொரு அம்சமாகும்.

1.4.2.2 மருந்தக ஒழுங்குபடுத்தல் பிரிவின் நிறுவனக் பட்டியல்



1.4.2.3 மருந்தக ஒழுங்குபடுத்தல் பிரிவின் செயற்பாடுகள்

பின்வருவன உள்ளடங்கலாக NMRA சட்டத்தின் கீழுள்ள மருந்துகள், மருத்துவ சாதனங்கள், அழகுசாதனப் பொருட்கள் மற்றும் எல்லைக்கோட்டு தயாரிப்புகளின் அனைத்து செயல்பாடுகளையும் ஒழுங்குபடுத்துதல்;


- மருந்துகள், மருத்துவ சாதனங்கள், அழகுசாதனப் பொருட்கள் மற்றும் எல்லைக்குட்பட்ட தயாரிப்புகளுக்கான மதிப்பீட்டை மேற்கொண்டு இறக்குமதி உரிமம் வழங்குவதற்கும் பதிவு செய்வதற்கும் பரிந்துரைகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்.
- உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் காணப்படுகின்ற மருந்து உற்பத்தித் தளங்களை கண்காணித்தல்
- விலை கட்டுப்பாடு
- தீவு முழுவதும் உள்ள மருந்தகங்களை ஒழுங்குபடுத்துதல்
- பார்மகோவிஜிலென்ஸ்

1.4.3 நிதிப் பிரிவு

1.4.3.1 அறிமுகம்

அதிகாரசபையின் அனைத்து பண நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்துதல் நிதிப் பிரிவால் கையாளப்படுகிறது. அதன்படி, இனங்காணப்பட்ட அனைத்து வருமான மூலங்களிலிருந்தும், பணத்தை அறவிட்டு, காசோட்டத்தை இப்பிரிவு திறம்பட கையாளுகின்றது. அனைத்து செலவுகளையும் உள்ளடக்கிய வருடாந்த வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும் போது, இறுதிக் கணக்குகளை சரியான நேரத்தில் சமர்ப்பிப்பது நிதிப் பிரிவின் முக்கிய பணியாகும். அத்துடன், NMRA இன் மற்ற பிரிவுகளின் சீரான செயல்பாடுகளை உறுதிசெய்ய தேவையான அனைத்து கொள்முதல் நடவடிக்கைகளும் நிதிப் பிரிவால் கையாளப்படுகின்றன.

1.4.3.2 நிதிப் பிரிவின் பட்டியல்



1.4.3.3 நிதிப் பிரிவின் தொழிற்பாடுகள்


- பதினெட்டு வருவாய் மார்க்கங்களிலிருந்து வருவாயைப் பெறுதல்.
- இறுதிக் கணக்குகளைத் தயாரித்தல்
- எதிர்வரும் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டங்களை தயாரித்தல் மற்றும் ஒப்புதல் பெறுதல்
- அதிகாரசபையின் அன்றாட நடவடிக்கைகளை நடத்துவதற்கு தேவையான அனைத்து வழங்கல்களையும் பராமரித்தல்
- அனைத்து காசுக் கட்டுப்பாடு நடவடிக்கைகள்
- பெறுகை நடவடிக்கைகள்

1.4.4 நிர்வாகப் பிரிவு

1.4.4.1 அறிமுகம்

NMRA இன் ஆரம்பம் முதலே, நிர்வாக பிரிவானது அதிகாரசபைக்கு முக்கிய பங்காற்றி வருகிறது. மருந்தக ஒழுங்குமுறைப் பிரிவின் ஒப்புதலின் அடிப்படையில் அனைத்து வகையான மருத்துவப் பொருட்கள் மற்றும் அழகுசாதனப் பொருட்களின் வழங்குனர்களுக்கு உரிமம் மற்றும் பதிவுச் சான்றிதழ்களை வழங்குவதே நிர்வாகப் பிரிவின் முக்கிய பணியாகும். மேலும், கட்டிடப் பராமரிப்பு, மின்சாதனப் பொருட்களைப் பழுது பார்த்தல், வாகன முகாமைத்துவம், சர்வீஸ் செய்தல் மற்றும் பழுது பார்த்தல், அனைத்து வகையான பட்டியல்களுக்கும் இதர கொடுப்பனவுகளுக்கும் அங்கீகாரம் பெறுதல், விடுமுறை மற்றும் ஏனைய பதவியணியினர் ஏற்பாடுகளை பராமரித்தல் மற்றும் பணியாளர் நலனை மேம்படுத்துவதற்கான ஏற்பாடுகள் ஆகியவை இப்பிரிவின் மூலம் கையாளப்படுகின்றன. ஏனைய நிறுவனங்களுடனும் முறையான தகவல்தொடர்புகளை பேணுவதன் மூலம், அந்த நிறுவனங்களின் வாடிக்கையாளர்களுக்கு உயர்தர சேவைகளை வழங்குவதற்கு இப்பிரிவு உதவுகிறது.

1.4.4.2 நிர்வாகப் பிரிவின் பட்டியல்



1.4.4.3 நிர்வாகப் பிரிவின் தொழிற்பாடுகள்

NMRA இல் உள்ள அனைத்து நிர்வாக மற்றும் பராமரிப்பு செயல்பாடுகளையும் குறிப்பாக மருந்துகள், மருத்துவ சாதனங்கள் மற்றும் எல்லைக்கோட்டு உற்பத்திப் பொருட்களின் உரிமங்கள் மற்றும் பதிவு சான்றிதழ்களை வழங்குவதற்கும் இந்த பிரிவு நிறுவப்பட்டுள்ளது. அதன்படி, நிர்வாகப் பிரிவில் செயல்படுத்தப்படுகின்ற முக்கிய தொழிற்பாடுகள் பின்வருமாறு;

- ஆவணங்களின் மதிப்பீடுகளுக்குப் பிறகு உரிமம் வழங்குதல் - மருந்துகள் (உற்பத்தி மற்றும் இறக்குமதி உரிமம்), சாதனங்கள் (உற்பத்தி மற்றும் இறக்குமதி உரிமம்), மாதிரி உரிமம் மற்றும் பதிவு உரிமம் வழங்குதல் (மருந்துகள் மற்றும் சாதனங்கள்) பதிவுச் சான்றிதழ்கள் மற்றும் உரிமங்கள் தட்டச்சு செய்தல் மற்றும் மதிப்பீட்டுத் தாள்களை மின்னஞ்சல் செய்தல்.
- உரிமம் மற்றும் பதிவு சான்றிதழ் வழங்கும் செயல்முறையை மேற்பார்வை செய்தல்
- அதிகாரசபைக்குள் பணியாளர் முகாமைத்துவம்
- அலுவலக வளாகத்தின் பராமரிப்பு தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்தல்
- பயன்பாட்டு சேவைகளை பராமரித்தல்
- பிரிவுடன் தொடர்புடைய அறிக்கைகளை தயாரித்தல்
- வாகனம் மற்றும் போக்குவரத்து முகாமைத்துவம்
- பணியாளர் விடுமுறைகள் தொடர்பான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல் (அதிகாரப்பூர்வ/உள்நாட்டு/வெளிநாட்டு)
- நிரந்தர பணியாளர்கள் மற்றும் பயிற்சி ஊழியர்களின் வருகையை சான்றளித்தல்
- அதிகாரசபைக்கான பாதுகாப்பு, சுத்திகரிப்பு, மின்சாரம், லி.்.ப்ட் சேவைகள், குளிரூட்டிகள், பிரதியெடுத்தல் கருவிகள் போன்ற தொடர்புடைய சேவைகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் கொடுப்பனவுகளிற்கு ஏற்பாடு செய்தல்
- உள்வாரி மற்றும் வெளிவாரி பதிவேட்டு அறைகளை மேற்பார்வை செய்தல்
- பணியாளர் அடையாள அட்டைகளை வழங்குதல்

1.4.5 சட்டப் பிரிவு


1.4.5.1 அறிமுகம்

2017 ஏப்ரல் 21 முதல் அமுலுக்கு வரும் வகையில் சட்டப் பிரிவு நிறுவப்பட்டதுடன், இது NMRA ஒரு தரப்பாக இருக்கும் அனைத்து வழக்கு விவகாரங்கள் உட்பட அனைத்து சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் சிக்கல்களிலும் அதிகாரசபைக்கு ஆலோசனை வழங்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

NMRA இன் ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகளுக்கு சட்டப் பிரிவின் வகிபாகம் அவசியமாகும். 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைச் சட்டம் மற்றும் நேரடியாக தொடர்புடைய பிற சட்டங்களின் அடிப்படையில் NMRA ஆல்

மேற்கொள்ளப்படுகின்ற ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளின் போது சட்டப்பூர்வ அபிப்பிராயத்தை வழங்குவதற்கான பொறுப்பு சட்டப் பிரிவுக்கு உள்ளது.

1.4.5.2 சட்டப் பிரிவின் பட்டியல்



1.4.5.3 சட்டப் பிரிவின் பிரதான தொழிற்பாடுகள்

- உடன்படிக்கைகள், வர்த்தமானி அறிவித்தல்கள், அமைச்சரவை விஞ்ஞாபனம், புரிந்துணர்வு உடன்படிக்கை மற்றும் ஏனைய சட்ட ஆவணங்களை உருவாக்குதல்.
- முதலாந்தர மற்றும் இரண்டாந்தர சட்டங்களை திருத்துதல், ஆலோசனை வழங்குதல் மற்றும் மீளாய்வு செய்தல்.
  உதாரணமாக.: சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், வழிகாட்டுதல்கள் மற்றும் நிலைபேறான செயல்பாட்டு நடைமுறைகள் ஆகியவை NMRA இல் உள்ள சட்டப் பிரிவின் பொறுப்புகள் மற்றும் செயல்பாடுகளாகும்.
- முகவர் மாற்றல் விவகாரங்கள் மற்றும் சட்டப் பிரிவு தொடர்பான ஏனைய விடயங்களுக்கான விண்ணப்பங்களை நடத்துதல், கண்காணித்தல் மற்றும் செயலாக்குதல்.
- NMRA இன் ஏனைய பிரிவுகள் மற்றும் உரிமதாரர்கள், பங்குதாரர்கள், அமைச்சுக்கள்/பிரிவுகள் மற்றும் பிற மன்றங்களால் குறிப்பிடப்படும் விடயங்களில் சட்டப் பிரிவானது சட்டப்பூர்வ அபிப்பிராயங்களை வழங்குகிறது.
- பாராளுமன்ற விவகாரங்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைச் சட்டம் இன் கீழ் பல்வேறு ஒழுங்குபடுத்தல் விடயங்களில் சட்டப்பூர்வ உள்ளீட்டின் போதும் சட்ட நடவடிக்கைகளைத் ஆரம்பிக்க வேண்டிய வழக்குகளிலும் சட்டப் பிரிவு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்குகிறது.
- உச்ச நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், மாஜிஸ்திரேட் நீதிமன்றம், வணிக உயர் நீதிமன்றம், உயர் நீதிமன்றம், தொழிலாளர் தீர்ப்பாயம் மற்றும் மனித

உரிமைகள் ஆணையம், தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு போன்ற சட்ட நீதிமன்றங்களில் அதிகாரசபை ஒரு தரப்பு எனத் தாக்கல் செய்யப்படும் வழக்குகளைக் கையாள்வதற்கும் இது பொறுப்பாக உள்ளது.

- ஏதேனும் ஆணைக்குழுவின் விசாரணை /குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளின் போது தேவைப்படும் போது பங்குபற்றுதல்.
- 2016 இன் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட அனைத்து விண்ணப்பங்களையும் கையாளுதல்.
- சபைக் கூட்டங்களை ஒருங்கிணைத்தல்
- சட்டப் பிரிவு தொடர்பான பிற விடயங்கள்.

1.4.6 களப்பரிசோதனை மற்றும் அமுலாக்கல் பிரிவு


1.4.6.1 அறிமுகம்

களப்பரிசோதனை மற்றும் அமுலாக்கல் பிரிவு என்பது 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சட்டத்தின் கீழ் NMRA நிறுவப்பட்ட ஒரு பிரிவாகும்.

அதிகாரசபையால் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் இயக்கப்படும் NMRA சட்டத்தின் விதிகளை முறையாகச் செயல்படுத்துவது தொடர்பான சிக்கல்களை ஆய்வு செய்து விசாரணை செய்வதே NMRA இன் களப்பரிசோதனை மற்றும் அமுலாக்கல் பிரிவின் முக்கிய செயல்பாடாகும். NMRA சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளாக இந்தப் பிரிவுக்கு மூன்று சிரேஷ்ட உணவு மற்றும் மருந்து ஆய்வாளர் அதிகாரிகள் கௌரவ அமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ளனர். தற்போது இந்த பிரிவு சிரேஷ்ட உணவு மற்றும் மருந்து ஆய்வாளர் (C-FDI) தலைமையில் உள்ளது.

ஏனையவர்களுடன் தொடர்ந்து தொடர்பு கொள்ள வேண்டிய கடமைகளைச் செய்கையில் பெரும்பாலும் இத்துறையில் கடமைகளைச் செய்யும் கள அதிகாரிகளாக FDIகள் கருதப்படுகின்றனர்.

1.4.6.2 களப்பரிசோதனை மற்றும் அமுலாக்கல் பிரிவின் பட்டியல்



1.4.6.3 களப்பரிசோதனை மற்றும் அமுலாக்கல் பிரிவின் செயல்பாடுகள்


- NMRA சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியாகச் செயல்படுதல்
- சந்தைப்படுத்தலுக்குப் பின் கண்காணிப்பை நடத்துதல்
- தேவைப்படும்போது முறையான மற்றும் முறைசாரா மாதிரிகளைப் பெறுதல்
- உரிமம் வழங்குவதற்காக மருந்துகளை கையாளும் நிறுவனங்களை பரிசோதித்து பரிந்துரை செய்தல்
- உரிமம் வழங்குவதற்காக மருந்து போக்குவரத்து வாகனங்களை பரிசோதனை செய்தல் மற்றும் பரிந்துரை செய்தல்
- உற்பத்திப் பொருட்களை திரும்பப் பெறுதல் நடைமுறை செயல்படுத்தப்படுவதை உறுதி செய்தல்
- SSFFC மற்றும் கடத்தப்பட்ட பொருட்கள் மீது விசாரணை செய்தல் மற்றும் சட்ட நடவடிக்கைகளைத் தொடங்குதல்
- தனியார் சந்தையில் அரசுக்கு சொந்தமான மருந்துகள் விற்கப்படுவதை விசாரணை செய்தல்
- ஆபத்தான மருந்து பயன்பாடுகளை ஆய்வு செய்தல் மற்றும் பரிந்துரை செய்தல்
- அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கமைத்து நடத்துதல்
- சட்டத்தின் கீழ் செய்யப்படும் மீறல்களுக்கு எதிராக வழக்குகளை நடத்துதல்
- ஏனைய சட்ட அமலாக்க நிறுவனங்களுடன் ஒருங்கிணைதல் மற்றும் ஒத்துழைப்புடன் செயற்படுதல்

1.4.7 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) பிரிவு

1.4.7.1 அறிமுகம்

ICT பிரிவு 2019 இல் நிறுவப்பட்டதுடன் உதவி பணிப்பாளர் (ICT) ஒருவரின் மேற்பார்வையின் கீழ் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் பணிபுரிகிறார். தன்னியக்க செயல்முறைக்கு (e-NMRA) இணையாக, 2019 ஒக்தோபரில் ஒரு உதவி பணிப்பாளர் (ICT) பணியமர்த்தப்பட்டார். வணிகம் மற்றும் சேவையைப் பூர்த்தி செய்ய திறமையான, பாதுகாப்பான, நம்பகரமான மற்றும் நிலைபேறான IT உள்கட்டமைப்பை வழங்குவதே ICT பிரிவின் தூரநோக்காகும். ICT பிரிவானது உள்ளக பகுதி நெட்வொர்க், கணினி வன்பொருள் மற்றும் மென்பொருள் முகாமைத்துவம், தரவுத்தளங்கள், வலைத்தளங்கள் மற்றும் ICT கொள்முதல் நிர்வாகம் உள்ளிட்ட தகவல் மற்றும் தகவல்தொடர்பு முகாமைத்துவத்திற்கு பொறுப்பாக உள்ளதுடன், தேவைக்கேற்ப ICT செயற்திட்ட நிர்வாகத்தில் ஈடுபடுகின்றது. தற்போதுள்ள நெட்வொர்க்கின் அலைவரிசையை விரிவுபடுத்துவதன் மூலம் நிறுவனத்தின் ICT உள்கட்டமைப்பை மேம்படுத்த ஒரு தரவு மையத்தை செயல்படுத்த ICT பிரிவு திட்டமிட்டுள்ளது. வழங்கப்படும் சேவைகளின் வெளிப்படைத்தன்மை, பொறுப்புணர்வு மற்றும் கடப்பாட்டை மேம்படுத்த ICT கொள்கைகளை செயல்படுத்த ஐஊவு பிரிவானது திட்டமிட்டுள்ளது. இப்பிரிவுக்குரிய பணிகளைச் செய்வதிலும், திட்டமிடுவதிலும் போதுமான பணியாளர்கள் இல்லாதது பெரும் பிரச்சினையாக உள்ளதுடன் இந்தப் பிரச்சினையைச் சமாளிப்பதற்குப் புதிய பணியாளர்களை நியமிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

1.4.7.2 ICT பிரிவின் கட்டமைப்பு வரைபடம்




1.4.8 மனித வளப் பிரிவு

1.4.8.1 அறிமுகம்

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் மனிதவளப் பிரிவானது, அதிகாரசபை ஊழியர்களின் ஆட்சேர்ப்பு, மேம்பாடு, தக்கவைப்பு மற்றும் பணிநீக்கம் செயல்முறைகளைக் கையாளுகிறது. இதன்படி, அதிகாரசபையின் நோக்கங்களை வினைத்திறனாகவும் பயனுறுதியாகவும் அடைந்து கொள்வதற்காக பணியாளர்களின் பயன்பாட்டை அதிகப்படுத்துவதே இப்பிரிவின் நோக்கமாகும்.

1.4.8.2 மனித வளப் பிரிவின் பட்டியல்



அத்தியாயம் - 2
செயல்முன்னேற்றம் மற்றும் தூரநோக்கு

பகுதியளவான சுயாட்சியுடன் ஒரு குறிப்பிட்ட மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை இருத்தல் வேண்டும் என்ற அரசின் கொள்கைத் தீர்மானத்தின் காரணமாக, 2015 இன் NMRA சட்டத்தின் கீழ் NMRA உருவாக்கப்பட்டது. பாதுகாப்பு, செயல்திறன், தரம் மற்றும் விலை ஆகியவற்றின் மூலம் பொதுமக்கள் நலன்களை அடைந்து கொள்வதற்காக மருந்து தயாரிப்புகளை (மருந்துகள், மருத்துவ சாதனங்கள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள்) ஒழுங்குபடுத்துவதே இதன் பொறுப்பாகும்.

ஸ்தாபிப்பின் ஆரம்ப ஆண்டுகளின் போது, அதன் இலக்குகளை அடைவதற்கு பல குறைபாடுகள் காணப்பட்டன. இவை அனைத்தையும் மீறி, NMRA இனால் நாட்டிற்கு ஒரு குறிப்பிடத்தக்க சேவையை வழங்க முடிந்துள்ளது.

2.1 தேசிய மருந்துகளின் தர உத்தரவாத ஆய்வகத்தின் (NMQAL) செயல்முன்னேற்றம்

2021 இல் செய்தது எவை:

ISO 17025 தர நிலையைப் பெறுவதற்கான ஆரம்ப மதிப்பீட்டை SLAB (ஆன்லைனில்) நடத்தியது.

ISO 9001 ஆரம்ப கணக்காய்வு ஒரு ஆலோசகரால் நடத்தப்பட்டது.

NMQAL ஊழியர்களுக்கு பின்வரும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்பட்டு நடத்தப்பட்டன. அனைத்து பயிற்சி நிகழ்ச்சிகளும் மெய்நிகர் சந்திப்பாக செய்யப்பட்டன.

- முறை சரிபார்ப்பு 1 - 08 சனவரி 2021 - WHO ஆலோசகரால் நடத்தப்பட்டது
- முறை சரிபார்ப்பு 2 - 12 சனவரி 2021 - WHO ஆலோசகரால் நடத்தப்பட்டது
- NMQAL இன் அவுட்சோர்சிங் சோதனை நடவடிக்கைகள் - WHO ஆலோசகரால் நடத்தப்பட்டது
- மருத்துவப் பொருட்களின் தரக் கட்டுப்பாடு மற்றும் குறிப்புப் பொருட்களைத் தயாரித்தல்- WHO ஆலோசகரால் நடத்தப்பட்டது
- முக்கிய செயலாற்றல் குறிகாட்டிகள் - WHO ஆலோசகரால் நடத்தப்பட்டது
- உயர்தர நல்ல உற்பத்தி நடைமுறைகள் (GMP) களப்பரிசோதனை - WHO ஆலோசகரால் நடத்தப்பட்டது

எதிர்காலத்திற்கான திட்டங்கள்:

1) பல்வேறு விஞ்ஞான பின்புலங்கள் மற்றும் ஏனைய உதவிப் பணியாளர்களுடன் உயர் தகுதி வாய்ந்த திறமையான தொழில்நுட்ப பணியாளர்களை பணியமர்த்துதல்.
2) NMRA நிறுவனக் கட்டமைப்புடன் இணைந்த NMQAL இற்கான நிறுவன கட்டமைப்பு வரைபடத்தை உருவாக்குதல்.
3) சந்தைப்படுத்தலுக்குப் பிந்தைய கட்டத்தில் மேலதிக மாதிரிகளின் பகுப்பாய்வுகளை மீண்டும் தொடங்குதல்.
4) உள்நாட்டு முகவர்களால் வழங்கப்படும் ஆதரவு போதுமானதாக இல்லாததால், அதிநவீன மற்றும் அதிக உணர்திறன் கொண்ட பகுப்பாய்வு உபகரணங்களுக்கான பராமரிப்பு செயல்முறையை உருவாக்குதல்.
5) அனைத்து ஆய்வகத் தேவைகளையும் பெற்றுக் கொள்வதற்காக NMRA இல் தனியானதோர் கொள்வனவுப் பிரிவை நிறுவுதல்
6) (உபகரணங்கள், இரசாயனங்கள், கரைப்பான்கள், எதிர்வினைகள், முதன்மை மற்றும் பிற தரநிலைகள், கண்ணாடிப் பொருட்கள் மற்றும் பிற பாகங்கள் போன்றவை)
7) சிறந்த சேவைக்கான உள்ளக தொடர்புகள்/செயல்முறைகள்/ஆதரவை வலுப்படுத்துதல்.
8) ISO 17025 அங்கீகாரத்தை அடைவதற்காக மற்றும்/அல்லது WHO முன் தகுதி நிலைகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஆய்வக நடவடிக்கைகளை உருவாக்குதல்.

பிரிவின் செயலாற்றல்:

2021 ஆம் ஆண்டில் NMQAL சுமார் 389 மாதிரிகளை பகுப்பாய்வு செய்ததுடன் 86 மாதிரிகள்/தொகுப்புகளில் தரமற்ற நிலைமைகள் கண்டறியப்பட்டு, தரமற்றவைகள் குறித்த பரிந்துரைகள் அதற்கேற்ப வழங்கப்பட்டன.

பின்னிணைப்பு II ஐப் பார்க்கவும்

SDG's ஐ அடைவதல் மீதான செயலாற்றல்:

01.01.2021 - 31.12.2021

வழங்கிய தரச்சான்றிதழ்களின் எண்ணிக்கை	=	485-96
	=	389
வழங்கிய தரமற்ற அறிக்கைகளின் எண்ணிக்கை	=	86
2020 முதல் வழங்கிய தரமற்ற அறிக்கைகளின் எண்ணிக்கை சதவீதம் (%)	=	22

2.2 மருந்தக ஒழுங்குபடுத்தல் பிரிவின் செயல் முன்னேற்றம்

மருந்தக ஒழுங்குபடுத்தல் பிரிவானது மருந்துகள் ஒழுங்குபடுத்தல் பிரிவு, சாதன ஒழுங்குபடுத்தல் பிரிவு, அழகுசாதன ஒழுங்குபடுத்தல் பிரிவு, எல்லைக்கோட்டு ஒழுங்குபடுத்தல் பிரிவு, உற்பத்தி ஒழுங்குபடுத்தல் பிரிவு, மருந்தக ஒழுங்குபடுத்தல் பிரிவு, மருந்தியல் கண்காணிப்புப் பிரிவு, விலை நிர்ணயப் பிரிவு, மருத்துவ விநியோகவழிகள் ஒழுங்குபடுத்தல் பிரிவு, HS குறியீடுகள் அகற்றல் பிரிவு, தகவல், தகவல் தொடர்பு மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு, சந்தைப்படுத்தல் கட்டுப்பாட்டு விளம்பர அலகு, மற்றும் QMS அலகு ஆகியவற்றை இப்பிரிவு உள்ளடக்குகின்றது.

NMRA இன் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக பல்வேறு வேலைப் பாத்திரங்களைக் கொண்ட ஒழுங்குபடுத்தல் மருந்தாளர்களால் அதிகபட்ச செயலாற்றலுடன் நாளாந்த கடமைகள் முடிக்கப்படுகின்றன.

எதிர்காலத் திட்டங்கள்

1) வினைத்திறனை மேம்படுத்துவதற்காக ஒரே மாதிரியான வேலைப் பாத்திரங்களைக் கொண்ட குழுக்களை உருவாக்குகின்ற வகையில் பிரிவிற்கான உப-பிரிவை அறிமுகப்படுத்துதல்
2) அதிகப்படியான செயலாக்கத்தைக் குறைப்பதற்கும், அந்தந்தப் பிரிவுகளின் செயலாற்றலை மேம்படுத்துவதற்கும் மின்னணு அமைப்புத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

2.2.1 மருந்துகள் ஒழுங்குபடுத்தல் பிரிவு

மாதிரி வகை	சித்தி	தோல்வி/கைவசம்/ மீளப்பெறல்	ஏற்கனவே மீளப்பெறல்	செய்யாதவை	மொத்தம்
முறைப்பாடு	57	39	2	35	133
முறைசார்ந்த	25	10	-	52	87
முறைசாராத	44	3	-	5	52
ஆய்வக கோரிக்கை	7	3	-	-	10
மாதிரிக் கோரிக்கை	1	-	-	-	1
பதிவு	36	8	-	-	44
SPC கேள்விகோரல்	5	1	-	4	10
ஏனையவை	27	14	-	-	41
கண்காணிப்பு	83	8	-	-	91
செனிடைசர்					16
	285	**86**	**2**	**96**	**485**

மருந்துகள் ஆவண மதிப்பீடுகள்

விண்ணப்பங்களின் வகை	கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை	மதிப்பீடு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை
புதிய மருந்துகளிற்கான விண்ணப்பங்கள்	239	562
MEDREG விண்ணப்பங்கள்	413	
மீள் பதிவுக்கான விண்ணப்பங்கள்	125	
மேலதிகமானவை	1251	

ஆவண மதிப்பீட்டிற்கான துணைக்குழு - MEC கூட்டங்களின் எண்ணிக்கை

மொத்தமாக மதிப்பிடப்பட்ட ஆவணங்கள்	MEC – உப குழுவால் மீளாய்வு செய்யப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை	CEO கையொப்பத்திற்காக அனுப்பப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை
682	682	0

புதிய மருந்து வழங்குனர்களிற்கான விண்ணப்பங்களின் மீளாய்வு (NME)

கிடைத்த மொத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை (NME)	மீளாய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	மீளாய்வு செய்து நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை
69	46	23

தனிப்பட்ட பயன்பாட்டு அதிகாரத்திற்கான விண்ணப்பங்களை மதிப்பிடுதல்

தனிப்பட்ட பயன்பாட்டு அதிகாரத்திற்காக மீளாய்வு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	மீளாய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	மீளாய்வு செய்து நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை
145	136	09

மாதிரி இறக்குமதி உரிமத்துக்கான விண்ணப்பங்களை மதிப்பிடுதல்

மாதிரி இறக்குமதி உரிமத்துக்காக கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை	மீளாய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை (2021.05.29 முதல்)	மீளாய்வு செய்து நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை
693	633	60

நடாத்தப்பட்ட MEC கூட்டங்களின் எண்ணிக்கை = 10 (10 கூட்ட அறிக்கைகள் எழுதப்பட்டன)

MEC உப குழுக்களின் எண்ணிக்கை - 13 உப குழுக்கள்

கட்டுப்படுத்தப்பட்ட பொருட்களுக்கான இறக்குமதி அங்கீகாரத்திற்கான விண்ணப்பங்கள்

கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை	மதிப்பீடு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	மதிப்பீடு செய்து நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை
125	125	0

தனியார் மருத்துவமனைகளுக்கான போதை மருந்துகளின் மாதாந்த ஒதுக்கீட்டை அங்கீகரிப்பதற்கான கோரிக்கை

கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை	மீளாய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	மீளாய்வு செய்து நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை
34	34	0

தனியார் மருத்துவமனைகளில் போதை மருந்துகளை கையாள அதிகாரமளிக்கப்பட்ட நபரை அங்கீகரிப்பதற்கான கோரிக்கைகள்

கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை	மீளாய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	மீளாய்வு செய்து நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை
23	23	0

பதிவு விலக்களிப்பு வழங்குதல்

பதிவு விலக்களிப்பு விண்ணப்பங்களிற்காக நடத்தப்பட்ட கூட்டங்கள் =

கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை	மீளாய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	மீளாய்வு செய்து நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை
351	254	97

தரமற்ற பொருட்களின் அறிக்கைகள் மீதான மீளாய்வு

கிடைத்த NMQAL அறிக்கைகள்	தொடர்புடைய ஆர்வத் தரப்பினர்களுடனான தொடர்பாடல்	முடிவுகாணாதவை
65	65	0

கப்பல் பொருள் அகற்றல் அங்கீகார விண்ணப்பங்களின் மீளாய்வு

கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை	மீளாய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	மீளாய்வு செய்து நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை
55	55	0

பதிவுச் சான்றிதழ்கள் மற்றும் இறக்குமதி உரிமங்களை காலநீடிப்புச் செய்தல்

கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை	மீளாய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	மீளாய்வு செய்து நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை
3892	2355	1537

இறக்குமதி உரிமங்களை காலநீடிப்புச் செய்தல்

கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை	மீளாய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	மீளாய்வு செய்து நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை
4067	3742	325

மருந்துகள் தரவுத் தளத்தை புதுப்பித்தல்

நிர்வாகப் பிரிவிலிருந்து கிடைத்த பதிவுச் சான்றிதழ்களின் எண்ணிக்கை	தரவுத் தளத்தில் உள்ளீர்க்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை	உள்ளீர்க்கப்படாதவற்றின் எண்ணிக்கை
1336	1336	0

2.2.2 மருத்துவ சாதனங்கள் ஒழுங்குபடுத்தல் பிரிவு

மாதிரிகளின் இறக்குமதி உரிம விண்ணப்பங்கள்

கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை	அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை
873	477	396

மருத்துவ சாதங்கள் விண்ணப்பங்கள்

கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை	மதிப்பீடு செய்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை	தீர்மானங்கள்
புதிது - 259 மீள் பதிவு - 101 புதுப்பித்தல் - 826	புதிது - 681 மீள் பதிவு - 63 புதுப்பித்தல் - 375	FR - 207 PR - 777 RJ - 58 தரவுக்காக காத்திருத்தல்/ மாதிரிகள் - 103 திருத்திய சான்றிதழ்கள் - 56

பதிவு விலக்களிப்பு

கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை	அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை
1312	766	546

சான்றிதழ் / உரிமக் காலநீடிப்பு

கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை	சான்றிதழ்கள் / உரிமங்களை காலநீடிப்புச் செய்தல் எண்ணிக்கை
2357	1724

உத்தியோகத்தர்	மதிப்பீடு செய்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை						
	மருத்துவ சாதன விண்ணப்பங்கள்			மாதிரி இறக்குமதி உரிம விண்ணப்பங்கள்	WORs	A/T கோவைகள்	சான்றிதழ்/ உரிமக் காலநீடிப்பு
	புதிய	RR	புதுப்பிப்பு				
P3	46	02	45	இல்லை	இல்லை	-	
P8	49	03	18	-	1312	-	
P7	84	10	47	831	-		
P27	84	05	37	-	-	-	
P25	30	04	56	-	-	-	
P24	93	05	22	-	-	-	
P9	75	09	19	05	-	-	
P33	74	10	57	24	-	-	
P39	60	01	இல்லை	13	-	-	-
P37	12	01	11			-	
P28	75	16	63	-	-	-	

2.2.3 அழகுசாதனப் பொருட்கள் ஒழுங்குபடுத்தல் பிரிவு

விண்ணப்பத்தின் வகை	கிடைத்த கோவைகளின் எண்ணிக்கை	மதிப்பீடு செய்யப்பட்டவற்றின் எண்ணிக்கை
2021 இற்கு கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை	4232	4035
மொத்த புதிய விண்ணப்பங்கள்	2413	2367
மொத்த புதுப்பித்தல் விண்ணப்பங்கள்	1681	1530
மொத்த மீள் பதிவு விண்ணப்பங்கள்	138	138

விண்ணப்பத்தின் வகை	வழங்கப்பட்ட பதிவின் வகை	மதிப்பீடு செய்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை	ஆண்டில் மதிப்பீடு செய்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை
புதிய விண்ணப்பங்கள்	மாகாணப் பதிவு	1940	2367
	முழுமையான பதிவு	-	
	தரவுக்காக காத்திருத்தல்	394	
	நிராகரிப்பு	33	
புதுப்பித்தல் விண்ணப்பங்கள்	மாகாணப் பதிவு	710	1530
	முழுமையான பதிவு	634	
	தரவுக்காக காத்திருத்தல்	170	
	நிராகரிப்பு	16	
	மாகாணப் பதிவு	67	

மீள் பதிவு விண்ணப்பங்கள்	முழுமையான பதிவு	53	138
	தரவுக்காக காத்திருத்தல்	13	

2.2.4 எல்லைக்கோட்டு பொருட்கள் ஒழுங்குபடுத்தல் பிரிவு

2021 இல் BPR பிரிவின் செயலாற்றல்

எல்லைக்கோட்டு பொருட்கள் ஒழுங்குபடுத்தல் பிரிவின் செயலாற்றல்	
புதிய விண்ணப்பங்களை வகைப்படுத்தல்	
2021 இல் ஏற்றுக் கொள்ளப்பட்ட வகைப்படுத்தல் விண்ணப்பங்களின் எண்ணிக்கை	232
2021 இல் வழங்கப்பட்ட வகைப்படுத்தல் அறிக்கைகளின் எண்ணிக்கை	57
2022.05.19 இல் உள்ளவாறு இல் வழங்கப்பட்ட வகைப்படுத்தல் அறிக்கைகளின் எண்ணிக்கை (2021 இல் ஏற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்களில் மாத்திரம்)	153
2021 இல் நிராகரிக்கப்பட்ட மொத்த வகைப்படுத்தல் விண்ணப்பங்களின் எண்ணிக்கை	9
பதிவுசெய்தல் விண்ணப்பங்கள்	
2021 இல் ஏற்றுக் கொள்ளப்பட்ட பதிவுசெய்தல் விண்ணப்பங்களின் எண்ணிக்கை	45
2021 இல் மதிப்பிடப்பட்ட பதிவுசெய்தல் அறிக்கைகளின் எண்ணிக்கை	48
2021 இல் நிராகரிக்கப்பட்ட மொத்த பதிவுசெய்தல் விண்ணப்பங்களின் எண்ணிக்கை	4
கொள்கல அகற்றல் கோரிக்கைகள்	
2021 இல் சமர்ப்பிக்கப்பட்ட கொள்கல அகற்றல் கோரிக்கைகளின் எண்ணிக்கை	42
2021 இல் வழங்கப்பட்ட கொள்கல அகற்றல்களின் எண்ணிக்கை	29
நிராகரிக்கப்பட்ட கொள்கல கோரிக்கைகளின் எண்ணிக்கை	13
மாதிரி இறக்குமதி அனுமதிப்பத்திரங்கள்	
சமர்ப்பிக்கப்பட்ட மாதிரி இறக்குமதி அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை	54
வழங்கப்பட்ட மாதிரி இறக்குமதி அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை	64

நிராகரிக்கப்பட்ட மாதிரி இறக்குமதி அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை	28

2.2.5 உற்பத்தி ஒழுங்குபடுத்தல் பிரிவு (MFRD)

1) உள்நாட்டு உற்பத்திகளின் GMP களப்பரிசோதனை

மருந்து உற்பத்தியாளர்கள் - 23
சாதன உற்பத்தியாளர்கள் - 48
அழகுசாதனப்பொருள் உற்பத்தியாளர்கள் - 103
மொத்தம் - 174

குறிப்பு: ஒத்த உற்பத்தியாளர்களின் பின்தொடர் களப்பரிசோதனை உள்ளடங்கலாக

2) வெளிநாட்டு உற்பத்தி தளங்களின் ஒப்புதலுக்கான விண்ணப்பங்கள்

பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை - 51
அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை - 41
குறைபாடுள்ள தரவு/GMP ஆய்வுக்காகக் காத்திருக்கப்படுகிறது - 09
நிராகரிக்கப்பட்ட எண்ணிக்கை - 04

3) உருவாக்கிய ஒப்புதல்கள்

பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை - 540
அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை - 533
நிராகரிக்கப்பட்ட எண்ணிக்கை - 7

4) சான்றிதழ்கள் மற்றும் உரிமங்களை செயலாக்குதல்

i) GMP சான்றிதழ்கள் - 34
ii) இலவச விற்பனைச் சான்றிதழ்கள் - 12
iii) ஒரு மருந்துப் பொருளின் சான்றிதழ்கள் - 03
iv) உற்பத்தி உரிமங்கள் - 288
v) சுங்க அனுமதிக்கான விளக்கக் கடிதங்கள்
தேவையான பொருள் மற்றும் உபகரணங்கள்
உள்நாட்டு உற்பத்தியாளர்கள் - 289

5) வழிகாட்டி வெளியீடு

i. ஒரு வெளிநாட்டு உற்பத்தி ஆலையின் ஒப்புதலுக்கான வழிகாட்டுதல்

6) SOP கள் தயாரித்தல்

உற்பத்தி ஒழுங்குமுறைப் பிரிவுக்கான வருடாந்திர பயிற்சித் திட்டத்தைத் தயாரித்தல்

2.2.6 விலையிடல் பிரிவு

வெளியிடு மற்றும் விநியோகிக்கத்தக்கவை
ஆவணங்கள் பெறப்பட்ட மதிப்பீட்டுத் தாள்களின் எண்ணிக்கை = 232 நிர்வாக அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை = 112 மொத்தம் (புதிய/MHMH/ மேலதிக) மதிப்பாய்வு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் - 516 விண்ணப்பங்கள். (மேல்முறையீடுகள் மற்றும் வினவல்கள் உட்பட) அங்கீகரிக்கப்பட்டவை:- 319 விண்ணப்பங்கள் 25 விண்ணப்பங்கள் உள்நாட்டு முகவர்களுடன் தொடர்பு கொண்டு எம்ஆர்பியை பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் ஆவணங்களின் பேக்லாக்:- 25 விண்ணப்பங்கள். **இறக்குமதி உரிமங்கள்.** மொத்தம் மதிப்பாய்வு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் - 130 விண்ணப்பங்கள். குழு ஒப்புதல் - 95 விண்ணப்பங்கள் 35 விண்ணப்பங்கள் உள்நாட்டு முகவர்களுடன் தொடர்பு கொண்டு எம்ஆர்பியை பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்

2.2.7 பரீட்சார்த்த சிகிச்சை ஒழுங்குபடுத்தல் பிரிவு

மருத்துவ பரிசோதனைகள் மதிப்பீட்டுக் குழு (CTEC) நடத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை: 12

இலக்கு: வருடத்திற்கு குறைந்தபட்சம் 10 கூட்டங்கள் (இலக்கு எட்டப்பட்டது)

மதிப்பாய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்ட மருத்துவ பரிசோதனை விண்ணப்பங்களின் சுருக்கம்

01.01.2021 முதல் 31.12.2021 வரை பெறப்பட்ட விண்ணப்பங்களின் மொத்த எண்ணிக்கை: 09

புலனாய்வு புதிய மருந்துகள் (IND) மீதான பரிசோதனை விண்ணப்பங்களின் எண்ணிக்கை : 5

*2021 ஆம் ஆண்டில் மதிப்பாய்வு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் மொத்த எண்ணிக்கை : 11

முடிவு நிலுவையில் உள்ள விண்ணப்பங்களின் மொத்த எண்ணிக்கை : 02

*2020 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்படும் 02 விண்ணப்பங்கள் அடங்கும்

புலானாய்வு பொருள் வகைக்கு ஏற்ப பரீட்சார்த்த சிகிச்சை விண்ணப்பங்கள்

உற்பத்திப் பொருள் வகை	அங்கீகரிக்கப்பட்டவை	அங்கீகரிக்கப்படாதவை	நிலுவை	ஏனையவை	மொத்தம்
மருந்துகள்	8	1	2	-	11
மருத்துவ சாதனங்கள்	-	-	-	-	-
எல்லைக்கோட்டு பொருட்கள்	-	-	-	-	-
மொத்தம்	**8**	**1**	**2**	**-**	**11**

NMRA தொடர்பு இல.	விண்ணப்பம் கிடைத்த திகதி	தீர்மானத்தை அறிவிக்கும் கடிதத்தின் திகதி	இறுதித் தீர்மானத் திகதி (நிறுத்தக் கடிகாரத்துடன்)	குறிப்பு
CLITRI/2020/0043	30.10.2020	22.01.2021	56 நாட்கள்	-
CLITRI/2021/0044	18.11.2021	25.01.2021	49 நாட்கள்	-
CLITRI/2021/0049	17.05.2021	30.08.2021	36 நாட்கள்	-
CLITRI/2021/0050	04.06.2021	12.07.2021	19 நாட்கள்	-
CLITRI/2021/0051	07.06.2021	09.07.2021	58 நாட்கள்	மேன்முறையீடு சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது
CLITRI/2021/0052	09.06.2021	13.07.2021	22 நாட்கள்	-
CLITRI/2021/0053	28.06.2021	14.07.2021	10 நாட்கள்	-
CTM/022/2021	01.09.2021	12.11.2021	43 நாட்கள்	-
CTM/023/2021	01.09.2021	15.11.2021	47 நாட்கள்	-
CTM/024/2021	17.09.2021	29.09.2021	-	NMRA ஆல் எழுப்பப்பட்ட ஐயவினாவிற்கு PI பதிலளிக்கவில்லை.
CTM/025/2021	04.10.2021	-	-	மீளாய்வு செய்யப்படுகிறது.

மதிப்பாய்வுக்கான சராசரி நேரம்* : 37 நாட்கள்

75 நாட்களுக்குள் மேற்கொள்ளப்பட்ட மதிப்பாய்வுகளின் சதவீதம் : 100%

நடத்தப்பட்ட பயிற்சிகள் / செயலமர்வுகள்

i. WHO ஆல் நடத்தப்பட்ட GCP ஆய்வு செயலமர்வு – 2021 செப்டம்பர் 22 முதல் செப்டம்பர் 24 வரை

திறைசேரியின் அங்கீகாரமின்றி பதவிய ணியினருக்காக கொவிட் 19 ஊக்குவிப்புத் திட்டம் எனும் பெயரில் ஊக்குவிப்புத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டு சாதாரண வேலை நாட்கள் மற்றும் வார இறுதி வேலைநாட்கள் என்பதைக் கருத்திற் கொள்ளாது கடமைக்குச் சமுகமளித்த நாளொன்றுக்கு **1** ½ நாள் வீதம் என்ற அடிப்படையில் கணிப்பிடப்பட்டு முன்னைய ஆண்டில் ரூபா **17,843,781** தொகையும் மீளாய்வாண்டில் ரூபா **44,273,092** தொகையுமாக மொத்தம் ரூபா **62,116,873** ஊக்குவிப்புப் படியாக செலுத்தப்பட்டிருந்தது.

(ii) 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க சுற்ற றிக்கையின் 5.1.1, 5.1.2 மற்றும் 5.1.3 ஆம் பந்திகள்

சுற்றறிக்கையின் 5.1.1 மற்றும் 5.1.2 ஆம் பந்திகளின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டு 5.1.3 ஆம் பந்தியின் படி அதன் பிரதிகள் வரிசை அமைச்சு, பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களம் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கணக்காண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களிற்கு முன்னர் அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்காக அதிகாரசபையால் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii)2015 யூலை 17 ஆந் திகதி PED/**03/2015** ஆம் இலக்க சுற்றறிக்கையின் 5.2 ஆம் பந்தி	சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு முரணாக அதிகாரசபையின் தலைவருக்கு மீளாய்வாண்டில் கொவிட் 19 படியாக ரூபா 454,827 எவ்வித அங்கீகாரமும் பெற்றப்படாது செலுத்தப்பட்டிருந்தது.

(எ) பொது நிர்வாக சுற்றறிக்கை

(i) 2013 ஒக்தோ பர் 07 ஆந் திகதிய 21/2013 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்ற றிக்கையின் 02(ஆ) மற்றும் (இ) பந்திகள்	கலண்டர் மாதமொன்றுக்கு ஆகக் கூடியது 02 நாட்களிற்கு முன் ஆங்கீகாரத்துடன் விடுமுறை நாட்களில் பணியாற்றுவதற்கும் கொடுப்பனவு செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும், 02 நாட்களிற்கு மேல் பணியாற்றுவதற்கு தேவையேற்படின் குறித்த வரிசை அமைச்சுச் செயலாளிடமிருந்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ள வேண்டும். இருப்பினும், அவ்வாறான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாது அதிகாரசபையின் நிறைவேற்று உத்தியோக த்தர் உட்பட 22 பதவிநிலை உத்தி யோகத்தர்களிற்கு மீளாய்வாண்டில் 415 நாட்கள் பணியாற்றயமைக்காக ரூபா 909,042 செலுத்தப்பட்டிருந்தது.
(ii) 2016 திசெம்பர் 29 ஆந் திக திய 30/2016 ஆம் இலக்க பொது நிர் வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி	ஒரு எரிபொருள் பரிசோத னையிலிருந்து 12 மாதங்களின் பின்னர் அல்லது 25,000 கி.மீ. தூரம் பயணித்த பின்னர் அல்லது என்ஜின் மீது பாரிய திருத்தம் மேற்கொள்ளப் பட்ட பின்னர் என்ற நிகழ்வுகளில் எது முதலில் நிகழ்கின்றதோ அந்த நிகழ்வின் போது மீண்டும் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இருப்பினும், அதிகார சபைக்குச் சொந்தமான 09 வாகனங் களிற்கான இந்த பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பின்வருவனவற்றைத் தவிர்த்து, அதிகாரசபையின் அதிகாரங்கள், கடமைகள், மற்றும் கடமைகளுக்கு இணக்கமற்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என

(அ) 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சட்டத்தின் 14(ஒ) உப பிரிவின் படி, அனுமதிப்பத்திரத்தின் கீழ் இறக்குமதி

செய்யப்பட்டிருந்த மருந்துகள், மருத்துவ உபகரணங்கள், எல்லைக்கோட்டு உற்பத்திப் பொருட்கள் அல்லது விசாரணைக்குட்பட்ட மருந்துப்பொருள் உற்பத்திகளின் அளவு தொடர்பான தகவல்கள் அதிகாரசபையால் சேகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைச் சட்டத்தின் 23 ஆம் பிரிவின் பிரகாரம், நிதியாண்டு முடிவடைந்து ஆறு மாதங்களிற்குள் அமைச்சருக்கு அதிகாரசபையால் அந்த நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக் கைகள் தொடர்பான வருடாந்த அறிக்கையொன்றை சமர்ப்பிக்க வேண்டியதுடன், அந்த அறிக்கையுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையும் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளும் எதிர்வரும் ஆண்டிற்கான உத்தேச செயற்பாடுகள் குறித்த அறிக்கையும் இணைக்கப்படுதல் வேண்டும். அந்த அறிக்கை கிடைத்த திகதியிலிருந்து ஆறு மாதங்களிற்குள் அமைச்சரால் அது பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2017 ஆம் ஆண்டு முதல் வருடாந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு அமைச்சருக்கும் பாராளுமன்றத்துக்கும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சட்டத்தின் 41 (2), 66 (2) மற்றும் 87 (2) உப பிரிவுகளின் படி, மருத்துவவியல், மருந்துப்பொருள் மருத்துவம் மற்றும் மருந்தக விஞ்ஞானம் அல்லது ஏனைய தொடர்புடைய துறைசார்ந்த பட்டதாரி உத்தியோகத்தர் ஒருவர் மருந்துகள் ஒழுங்குபடுத்தல் (Medicine Regulatory) பிரிவிற்கும், மருத்துவ உபகரணங்கள் ஒழுங்குபடுத்தல் (Medicine Devices Regulatory) பிரிவிற்கும் எல்லைக்கோட்டு உற்பத்திப் பொருள் ஒழுங்குபடுத்தல் (Border Line Production Regulatory) பிரிவிற்கும் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைச் சட்டத்தின் 43(2)(அ), (ஆ) மற்றும் 68(2) (அ) மற்றும் (ஆ) ஆம் உப பிரிவுகளின் பிரகாரம் மருந்துகள் மதிப்பீட்டுக் குழு மற்றும் மருத்துவ உபகரணங்கள் மதிப்பீட்டுக் குழுவிற்கு பதிவுகளிற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களின் பிரதிபலன்கள், ஆபத்துக்கள், எதிர்ப்புச்சக்தி, தரம், பாதுகாப்புத்தன்மை, தேவைப்பாடு, விலைகள் மற்றும் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் அந்த மருந்துகளின் பொருளாதார ரீதியான பகுப்பாய்வை உறுதியாகக் காண்பித்து தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கையொன்றை சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், மருந்துகள் மதிப்பீட்டுக் குழு மற்றும் மருத்துவ உபகரணங்கள் மதிப்பீட்டுக் குழுவினால் அவ்வாறான தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கையொன்று அதிகாரசபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சட்டத்தின் 69(1)(ஆ)(v) உப பிரிவுகளின் படி இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் பணிப்பாளர் நாயகம் அல்லது அவரால் பெயரிடப்பட்ட நபர் மருத்துவ உபகரண மதிப்பீட்டுக் குழுவிற்கு நியமிக்கப்பட வேண்டுமாயினும், அவ்வாறு நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. மருத்துவ உபகரணங்கள் உள்ளிட்ட கதிரியக்க உபகரணங்கள் மற்றும் திரவப் பொருட்களின் இறக்குமதி மற்றும் பாவனை தொடர்பில் உரிமங்களை வழங்குவதற்கும் ஒழுங்குபடுத்துவதற்கும் அதிகாரங்களைக் கொண்டுள்ள இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவைக்கு மருத்துவ உபகரண மதிப்பீட்டுக் குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டிய தேவைப்பாடு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சட்டத்தின் 72(1) மற்றும் 93(1) உப பிரிவுகளின் படி மருத்துவ உபகரணங்கள் மற்றும் எல்லைக்கோட்டு உற்பத்திப் பொருட்களை மதிப்பீடு செய்வதற்காக அந்தந்த மதிப்பீட்டுக் குழுக்களிற்கு பொதுவான வழிகாட்டல்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 72(4) மற்றும் 93(4) உப பிரிவுகளின் படி குறித்த மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கான உரிய கால எல்லைகள் உள்ளிட்ட பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகளைக் குறிப்பட்டு, சிறந்த உற்பத்திப் பொருட்கள் சம்பந்தமான வழிகாட்டல்களையும் அதிகாரசபையால் பரிந்துரைக்கப்பட்ட ஏனைய தொடர்புடைய வழிகாட்டல்களையும் அமுலாக்குவதற்காக மருத்துவ உபகரணங்கள் மற்றும் எல்லைக்கோட்டு உற்பத்திப் பொருட்களிற்கான பணிப்புரைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சட்டத்தின் 74(1) மற்றும் 95(1) உப பிரிவுகளின் படி, அனுமதி வழங்கப்படுகின்ற மருத்துவ உபகரணங்கள் மற்றும் பதிவுசெய்யப்பட்ட எல்லைக்கோட்டு உற்பத்திப் பொருட்கள் அமைச்சரால் காலத்துக்குக் காலம் பட்டியலிடப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைச் சட்டத்தின் 83(4) (ஆ) மற்றும் 102(4) (ஆ) ஆம் உப பிரிவுகளின் பிரகாரம் பதிவுகளிற்காகச் சமர்ப்பிக்கப்படுகின்ற மருத்துவ உபகரணங்கள் மற்றும் எல்லைக்கோட்டு உற்பத்திப் பொருட்களின் தரத்தை பரிசோதிப்பதற்காக அவை தேசிய மருந்துகள் தரப்பிரிசோதனை பாதுகாப்பு ஆய்வுகூடத்திற்கு

சமர்ப்பிக்கப்பட்டிருக்கவி ல்லை. அதற்குத் தேவையான வசதிகள் ஆய்வுகூடத்தில் இல்லை என்பதாக அதிகாரசபையின் தலைவரால் கருத்துரை வழங்கப்பட்டிருந்தது.

(ஐ) 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சட்டத்தின் 83(6) மற்றும் 102(6) உப பிரிவுகளின் படி, அமைச்சரால் மருத்துவ உபகரணங்கள் மற்றும் எல்லைக்கோட்டு உற்பத்திப் பொருட்களின் மதிப்பீட்டுக் குழுக்கள் மற்றும் தேசிய மருந்துகள் தரப் பாதுகாப்பு ஆய்வுகூடம் ஆகியவற்றால் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகள் அல்லது மதிப்பீடுகளின் போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள், அந்தப் பரிசோதனைகள் அல்லது மதிப்பீடுகளிற்கால கால எல்லைகள், மருத்துவ உபகரணங்கள் மதிப்பீட்டுக் குழுவால் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய முறை மற்றும் அந்தக் கூட்டங்களில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் மற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கைகளை தெளிவாகக் குறிப்பிட்டு பணிப்புரைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைச் சட்டத்தின் 123 ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகளை விசாரிப்பதற்காக முறைப்பாட்டுக் குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.4 பின்வருவனவற்றைத் தவிர்த்து, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பின்வருவனவற்றைத் தவிர்த்து, அதிகாரசபையின் வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் பயனுறுதியாக காலஎல்லைக்குள் சட்டங்களுக்கு இணக்கமாக கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தது என.

(அ) வாடகை அடிப்படையில் எடுக்கப்பட்டிருந்த புதிய அலுவலகக் கட்டிடத்தில் அலுவலக அறைகளை பிரித்துக் (Partition) கொடுப்பதற்காக மிகக்குறைந்த தொகையான ரூபா 4,898,750 இற்கு கூறுவிலை சமர்ப்பித்திருந்த மனுதாரருக்கு 2020 திசெம்பர் 17 ஆந் திகதி ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. இந்த கொள்வனவின் போது, அரசாங்க கொள்வனவு வழிகாட்டுதல்களின் 2.8.1 (ஆ), 2.12, 5.4.8, 6.3.3, 6.3.6 மற்றும் 8.12.2 ஆகிய வழிகாட்டல்கள் பின்பற்றப்பட்டிருக்காததுடன் வழிகாட்டுதல் 5.4.4 இன் படி முற்பணத்தைச் செலுத்துவதற்கான பிணைமுறி பெறப்படாமல் ரூபா 979,750 முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் ரூபா 6,854,519 செலவிடப்பட்டு சந்தை போட்டி விலை முறையை பின்பற்றி தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அரசாங்க கொளவனவு வழிகாட்டுதல்களின் 2.14.1 இன் பிரகாரம், ஆகக் குறைந்த சீல் வைக்கப்பட்ட 05 கூறுவிலைகளேனும் பெறப்பட வேண்டிய போதிலும 03 கூறுவிலைகள் மாத்திரம் கோரப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மேலும், அரசாங்க கொளவனவு வழிகாட்டுதல்களின் 2.8.1 (ஆ), 6.3.5 (அ), (ஆ), (இ), 6.3.6, 8.12.3 (அ), (ஆ), (இ), ஆகிய வழிகாட்டல்களிலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக செயற்பட்டு இந்தக் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) அரசாங்க கொளவனவு வழிகாட்டுதல்கள் கையேட்டின் 9.3.1 (ஆ) வழிகாட்டலின் படி ரூபா 200,000 இற்கு மேற்பட்ட வாகன திருத்தங்களிற்காக வரிசை அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், அந்த எல்லையை மீறி அதிகாரசபைக்குச் சொந்தமான 03 வாகனங்களை திருத்துவதற்காக மொத்தம் ரூபா 3,676,401 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், அதற்காக அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, திருத்தங்களின் போது அகற்றப்பட்ட பாகங்கள் மற்றும் அவற்றைக் கையேற்றமைக்கான லொக் பதிவுகள் காணப்படவில்லை. வாகனங்களிற்குப் பொறுப்பாகவுள்ள உத்தியோகத்தரினால் அந்தப் பாகங்கள் கையேற்கப்பட்டிருக்கவுமில்லை.

2.3 ஏனைய அவதானிப்புகள்

(அ) வேலைகள் முடிவடைந்த கோவைகளை எடுத்துச் சென்று பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தி பராமரித்துச் செல்லும் ஒப்பந்தம் அதிகாரசபையால் 2015 திசெம்பர் 01 ஆந் திகதி முதல் தனியார் கம்பனியொன்றுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின் ஆரம்பம் முதல் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான 06 ஆண்டு காலத்தில் ஒப்பந்த காரருக்கு ரூபா 6,062,550 செலுத்தப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டில் அப்போது ஒப்பந்தகாரர் வசம் காணப்பட்ட கோவைகளின் ஒரு பகுதி வெள்ளத்தால் அழிவுற்றதாக குறிப்பிட்டு 2016 மே மாதம் முதல் 2017 ஏப்ரல் மாதம் வரை ஒப்பந்த காரருக்கு பணம் செலுத்துதல் இடைநிறுத்தப்பட்டிருந்த போதிலும், வெள்ள த்தால் சேதமடைந்திருந்த கோவைகள் தொடர்பில் முறையான விசாரணை மேற்கொள் ளப்பட்டிருக்கவில்லை. மேலும், 2022 யூன் 30 வரையிலும் ஒப்பந்தகாரர் இடமிருந்து குறித்த சேவை பெற்றுக்கொள்ளப்பட்டு வந்திருந்ததுடன், கடந்த 06 ஆண்டுகளிற்கும் இதற்காக செலவிடப்பட்டுள்ள கிரயத்தை பகுப்பாய்வு செய்து அதிகாரசபைக்கென ஆவணப்படுத்தல் நிலையமொன்றை ஸ்தரிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் II ஆம் பகுதியின் 5.1 ஆம் பந்தியின் படி அனைத்து அரசாங்க நிறுவனங்களும் அவற்றினால் பொது மக்களுக்கு வழங்கப்படுகின்ற சேவைகளிற்காக அறவிடப்படுகின்ற கட்டணங்களை மீளாய்வு செய்து மூன்று ஆண்டுகளிற்கு ஒருமுறை ஆகக்கூடியது 15 சதவீத திருத்திற்கு உட்பட்டு, குறித்த வருமானக் கணக்கீட்டு உத்தியோகத் தர்களால் தமது அமைச்சுச் செயலாளரின் பரிந்துரையுடன் அங்கீகாரத்திற்காக திறைசேரிச் செயலாளருக்கு அல்லது திறைசேரியின் பிரதிச் செயலாளருக்கு அனுப்பிவைக்க வேண்டும். அதிகாரசபையால் மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் எல்லைக்கோட்டு உற்பத்திப் பொருட்களிற்காக பதிவுச் சான்றிதழை வழங்குதல், அனுமதிப்பத்திரங் களை வழங்குதல், பதிவுசெய்தலிலிருந்து விடுவித்தல் அங்கீகாரம், பொதியிடுவதற்கான அங்கீகாரம், முகவர்களிற்கு ஒப்படைப்பதற்கான அங்கீகாரம் போன்ற அங்கீகாரங்களை வழங்குதல், பரிசோதனைகளை நடாத்துதல் மற்றும் வழங்கப்படுகின்ற ஏனைய சேவைகளிற்காக அறவிடப்படுகின்ற கட்டண ங்கள் 2018 சனசவரி 05 ஆந் திகதி இறுதியாக திருத்தப்பட்டிருந்தன. அதன்படி, மீளாய்வாண்டில் கட்டணங்கள் திருத்தப்பட்டு அந்தத் திருத்தங்கள் அங்கீகாரத்திற்காக பொதுத் திறைசேரிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும், அதன் படி செயற்பட்டிருக்காமையால் மீளாய்வாண்டில் கட்டணங்களிலிருந்தான வருமானம் ஏறத்தாழ ரூபா 187,913,601 இனால் இழக்கப்பட்டிருந்தது.

(இ) தேசிய மருந்துகள் தரப் பாதுகாப்பு ஆய்வுகூடத்தினால் (National Drugs Quality Assurance Laboratory) ஆய்வுகூடத்தின் தரப்படுத்தல் தொடர்பில் இணக்கப்படாட்டு மதிப்பீட்டுச் சான்றிதழை பெற்றுக் கொள்வதற்காக இலங்கை இணக்கப்பாட்டுச் சபைக்கு 2020 பெப்ரவரி 06 ஆந் திகதி விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2022 யூலை 31 ஆந் திகதி வரை அந்த தரப்படுத்தல் சான்றிதழை பெற்றுக் கொள்வதற்கு முடியாது போயிருந்ததுடன், பெற்றுக்கொண்டிருந்த ஏனைய தரச் சான்றிதழ்கள் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2022 – 2026 இற்கான ஐந்தாண்டு கூட்டிணைந்த திட்டம் 2022 ஆம் ஆண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களிற்கு முன்னர் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், 2022 யூலை 04 ஆந் திகதி வரையிலும் அதனைத் தயாரிப்பதற்காக அதிகாரசபையால் ரூபா 1,641,600 செலவிடப்பட்டிருந்த போதிலும், அத்திகதி வரையிலும் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைச் சட்டத்தின் 39 ஆம் பிரிவின் பிரகாரம் தரப்பரிசோதனைக்காக தேசிய மருந்துகள் தரப் பாதுகாப்பு ஆராய்ச்சி ஆய்வகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மருந்து மாதிரிகளில் 2021 சனவர் 01 வரை பரிசோதனை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாத மருந்து மாதிரிகளின் எண்ணிக்கை பற்றிய தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் பெறப்பட்டிருந்த 216 மருந்து மாதிரிகளில் 157 மாதிரிகளுக்கும், மீளாய்வாண்டில் பெறப்பட்டிருந்த 477 மருந்து மாதிரிகளில் 299 இற்கும் மாத்திரம் மீளாய்வாண்டில் பரிசோதனை சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன. அதன்படி, 2019 முதல் 2021 வரையிலான 03 ஆண்டுகளில் பெறப்பட்ட மருந்து மாதிரிகளில், 2022 யூலை 31 வரை பரிசோதனை அறிக்கைகள் வழங்கப்படாத 91 மாதிரிகளில் 42 மாதிரிகள் நீதிமன்றத்தால் சமர்ப்பிக்கப்பட்ட மாதிரிகளாகும். ஆகையால் குறித்த நீதிமன்ற நடவடிக்கைகளில் கணிசமான கால தாமதம் ஏற்படுவதற்கு இது காரணமானமாகும் என்ற அபிப்பிராயத்தை கணக்காய்வில் நிராகரிக்க முடியாதுள்ளது.

(ஊ) மீளாய்வாண்டில் 18 சந்தர்ப்பங்களில் உத்தியோகத்தர்களின் தவறுகள் மற்றும் ஏனைய பல்வேறு காரணங்களால் ரூபா 1,620,119 கூட்டுத்தொகையான வருமானம் மீளச் செலுத்தப்பட்டிருந்தது. இந்த நிலைமை கடந்த பல வருடங்களாக காணப்பட்ட போதிலும், இதனைக் குறைத்துக் கொள்வதற்காக போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) 2018 ஆம் ஆண்டில், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துக்கு தாமதமாக பணம் செலுத்தியிருந்தமை, பெறுமதிசேர் வரி விலக் களிப்பை உரிய காலத்தில் கோரியிருக்காமை, மற்றும் அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தியிருந்த பெறுமதிசேர் விரியை மீளப்பெறுவதற்கு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த போதிலும் அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட் டிருந்தமை ஆகிய காரணங்களால் மிகைவிதிப்பு மற்றும் பெறுமதிசேர் வரியாக ரூபா 756,173 தொகை மீளாய்வாண்டில் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஏ) மருந்து மறுபதிவுக்காக சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பங்களுக்கு மறுபதிவுச் சான்றிதழ் களை வழங்குவதற்குப் பதிலாக, ஏற்கனவே உள்ள பதிவை நீடிக்கும் முறை பின்பற்றப்பட்டிருந்த போதிலும், அதற்காக முறையான ஒப்புதல் பெறப்பட்டிருக்க வில்லை. மீளாய்வாண்டில் மருந்துப்பொருள் மீள்பதிவுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த 3,892 விண்ணப்பங்களில் 2,904 விண்ணப்பங்களிற் காக ஏற்கனவே காணப்பட்ட காலம் நீடிக்கப்பட்டிருந்ததுடன் 988 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டிருந்தன. பதிவு நீடிப்பு முறையைப்

பின்பற்றியதன் காரணமாக, 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைச் சட்டத்தின் 47(3) மற்றும் 59(4) ஆகிய உப பிரிவுகளின் அடிப்படையில் மருந்து மதிப்பீடு தொடர்பான விதிகள் மீறப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

(ஐ) பதிவுக்காக சமர்ப்பிக்கப்படுகின்ற கோவையொன்றின் (Dossier) மதிப்பீட்டை முடிப்பதற்கு அதிகபட்சம் தேவைப்படும் காலம் 300 நாட்கள் என்ற போதிலும், 2020 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 146 களிற்குப் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்காததுடன் அவற்றிற்கு 2022 யூன் 25 ஆந் திகதி வரை பதிவுச் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டில் பதிவுசெய்யப்பட்டிருந்த 25 மருத்துவ உபகரணங்களிற்குரிய Dossiers மாதிரியை பரிசோதித்தபோது 06 Dossiers களின் பிரதான மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்காக 02 நாட்களும் மேலும் 04 Dossiers களின் மதிப்பீட்டிற்காக ஒரு மாதத்திற்கும் குறைவான காலமும் செலவிடப்பட்டிருந்தது. ஆனால் பதிவை முடிப்பதற்கு 01 முதல் 03 ஆண்டுகள் வரையான வீச்சில் காலம் எடுக்கப்பட்டிரு ந்தது. 18 Dossiers அதிகாரசபைக்கு கிடைத்த நாளிலிருந்து, பிரதான நிறைவேற்று அதிகாரியால் அதனை மருந்தகர்களிற்குச் சமர்ப்பிப்பதற்கு 1½ மாதங்கள் முதல் 01 ஆண்டு வரை எடுத்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன், அவற்றில் 11 Dossiers களின் செயலாற்றல் மதிப்பீட்டிற்காக சம்பந்தப்பட்ட கல்லூரி (College) அல்லது வெளிப்புற மதிப்பீட்டாளருக்கு (External Evaluator) கையளிப்பதற்கு 05 மாதங்கள் முதல் 01 வருடமும் 09 மாதங்களும் வரை எடுக்கப்பட்டிருந்தது. செயலாற்றல் மதிப்பீட்டின் பின்னர் 09 Dossiers களின் தொழில்நுட்ப மதிப்பீட்டை ஆரம்பிப்பதற்காக மருந்தகர்களால் 05 மாதம் முதல் 01 வருடமும் 04 மாதங்களும் வரை எடுக்கப்பட்டிருந்ததுடன், மருத்துவ உபகரணங்கள் மதிப்பீட்டுக் குழுவால் பதிவுக்காக அனுமதிக்கப்பட்டிருந்த 09 Dossiers களிற்கு பிரதான நிறைவேற்று அதிகாரியால் அங்கீகாரம் வழங்குவதற்கு14 நாட்கள் முதல் 02 மாதங்கள் வரை காலதாமதம் செய்யப்பட்டிருந்தது. இருப்பினும், அதிகாரசபையால் இந்த கால தாமதத்தைக் குறைப்பதற்காகவும் பதிவு செய்தல் செயல்முறையை வினைத்திறனா கவும் துரிதமாகவும் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) பதிவுக்காக சமர்ப்பிக்கப்படுகின்ற Dossier களை பராமரிக்கையிலும் தொடர்புடைய ஆவணங்களைத் தயாரிக்கையிலும் கவனக்குறைவாக அல்லது வேண்டுமென்றே தவறான தகவல்கள் சேர்க்கப்பட்டுள்ளதுடன், சில பணிகள் நிறைவேற்றப்பட்ட தேதிகள், அதிகாரிகள் பற்றிய தகவல்களும் சில அத்தியாவசிய ஆவணங்களும் Dossier இல் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

மேலும் சில Dossier களில், செயலாற்றல் மதிப்பீட்டி ற்காக குறித்த Dossier மற்றும் மாதிரிகள் சம்பந்தப்பட்ட கல்லூரிக்கு சமர்ப்பிக்கப்பட் டிருந்த மற்றும் திரும்பப் பெறப்பட்ட தேதிகள், மருந்தகர்களால் தொழில்நுட்ப மதிப்பீடு ஆரம்பிக்கப்பட்டு முடித்த தேதிகள், மற்றும் மருந்தகர்களின் பரிந்துரைகள், குறியீடுகள் மற்றும் கையொப்பங்கள் என்பன காணப்படாதிருந்ததுடன், தொழில்நுட்ப மதிப்பீட்டு சரிபார்ப்பு பட்டியலில் தவறான தகவல்கள் சேர்க்கப்பட்டிருந்தன. சில Dossier களில், விண்ணப்பத்தின் சுருக்க அறிக்கை மற்றும் மருந்தாளுநர்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டைச் செய்து பரிந்துரைகளை வழங்கிய தொழில்நுட்ப மதிப்பீட்டு சரிபார்ப்புப் பட்டியல் ஆகியவை சேர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) மருத்துவ உபகரண மதிப்பீட்டுக் குழுவிற்கு 20 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் நடைபெற்ற 10 கூட்டங்களில் உறுப்பினர்களின் பங்கேற்பு 35 சதவீதத்திற்கும் குறைவாக இருந்ததுடன், 07 உறுப்பினர்கள் ஒரு கூட்டத்திலேனும் பங்கேற்காமையால், ஆய்வக சேவைகள், உயிரியல் மருத்துவ விஞ்ஞான பொறியியல், பல் மருத்துவ சேவைகள், உயிரியல், அறுவைசிகிச்சை நோயியல் மற்றும் கதிரியக்கவியல் போன்ற துறைகளிற்கான நிபுணத்துவ அறிவு குழுவின் தீர்மானங்களிற்காக கிடைத்திருக்கவில்லை.

(ஔ) ஒசுசல் அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொள்வதற்காக நிகழ்நிலை (online) முறையின் ஊடாக பணம் செலுத்தப்பட் டிருந்த போதிலும், நிகழ்நிலை கணனிமயப் படுத்திய தன்னியக்க முறைமை 2021 ஆகஸ்ட் மாதத்தில் செயலிழந்தமையால் புதிய அனுமதிப்பத்திரமொன்றை வழங்குவதற்குப் பதிலாக 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டிருந்த அனுமதிப் பத்திரங்களிற்கு இறப்பர் சீல் பொறிக்கப்பட்டு காலநீடிப்புச் செய்து கையொப்பமிடப்பட்டிருந்தது. அந்தக் கால நீடிப்பாக பதிவேடொன்று பேணப்பட்டிருக்காததுடன், கால நீடிப்பிற்காக கையொப்பமிட்டிருக்காத சந்தர்ப்பளும் காணப்பட்டன.

(∴) அதிகாரசபையின் தரவு முறைமையினை தன்னியக்கப்படுத்தல் ஒப்பந்தமானது ரூபா 29 மில்லியன் தொகையான மொத்த ஒப்பந்தப் பெறுமதிக்கு 05 ஆண்டு காலத்திற்கு தனியார் கம்பனி ஒன்றுக்கு 2018 மே 03 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. இந்த ஆவணப்படுத்தல் மற்றும் பணி உள்வாங்கல் முகாமைத்துவ முறைமையினை சேவையொன்றாக நடைமுறைப்படுத்துவதற்காக Operational Expenditure Financing

கட்டமைப்பின் படி கையேற்று நடைமுறைப்படுத்துவதற்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந் ததுடன், 2019 யூன் மாதம் முதல் 2021 மே மாதம் வரையான காலத்தில் ஒப்பந்தக் கம்பனிக்கு ரூபா 12,253,328 செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், குறித்த தனியார் கம்பனியின் கவனயீனம் அல்லது வேண்டுமென்ற செயற்பாட்டால் இந்த தரவுத் தளத்திற்கு உள்வாங்கப்பட்டிருந்த சில தகவல்கள் அழிக்கப்பட்டிருந்ததுடன், அது தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை 2022 ஆகஸ்ட் 31 வரையிலும் இந்தச் சேவை செயலற்ற நிலையில் காணப்பட்டது. அவ்வாறே, இந்த முறைமையினை செயற்படுத்துகையில் தேவையான ஆலோசனைகள், முகாமைத்துவ மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்காக இலங்கை தகவல் மற்றும் தொழில்நுட்ப தொடர்பாடல் முகவர் நிலையத்துடன் 2018 யூன் 25 ஆந் திகதி ஒரு வருடத்திற்கு புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்த போதிலும், 05 ஆண்டுகால ஒப்பந்தத்திற்கு சரிசமமாக அந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒப்பந்த உடன்படிக்கையின் படி தகவல்களின் இரகசியத் தன்மையை பாதுகாப்பதற்காக இரகசியக் சொற்பதங்கள் மாற்றியமைக்கப்படுவதை அல்லது தகவல்கள் முறையற்ற விதத்தில் கையாளப்படுவதை தவிர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன், முறைமை தன்னியக்கமாக்கப்பட்ட பின்னர் manual மற்றும் automation ஆகிய இரண்டு முறைமைகளையும் ஒரே நேரத்தில் செயற்படுத்தி அதிகாரசபையின் உள்ளகப் பணிகள் (workflow) தொடர்பில் கணக்காய்வுப் பரிசோத னையொன்று (Audit trial) மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கோவைகளின் முகாமைத்துவம், பராமரிப்பு மற்றும் ஆவணங்களின் பிரதிகள் பாதுகாப்பான விதத்தில் 05 ஆண்டுகள் வரை குறித்த தரவுகளுடன் களஞ்சியப்படுத்தக்கூடிய ஆற்றல், நாளாந்தம், வாராந்தம் மற்றும் மாதாந்தம் தன்னியக்கமாக பிரதிகளை பெற்றுக்கொள்ளக்கூடிய ஆற்றல் மற்றும் தொழில்சார் பொறுப்புக்களிற்காக பாதுகாப்பு பெற்றுக் கொள்ளப்படுவதை உறுதிப்படுத்துதல் போன்ற விடயங்கள் குறித்து முகாமைத்துவம் கருத்திற் கொண்டிருக்காததுடன், குறித்த தரவுகள் மற்றும் இணைப்புகளின் தகவல்களை பாதுகாப்பாக பிரதியெடுக்காது ஒப்பந்தக் கம்பனிக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. உடன்படிக்கையிலுள்ள நிபந்தனைகளின் படி, ரூபா 7,558,128 கிரயமுடைய இந்தத் தரவுத் தளத்திலுள்ள சொத்துக்கள் மூலதனமாக்கப்பட வேண்டிய போதிலும், அதற்குப் பதிலாக அத்தொகை இலாபத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது. இந்தச் சம்பவங்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கும் அழிக்கப்பட்ட தகவல்களை மீள வைப்பதற்கு நியமிக்கப்பட்டிருந்த நிபுணத்துவக் குழுவினால் 2022 யூலை 15 ஆந் திகதி வெளியிடப்பட்டிருந்த அறிக்கையின் படி தரவுத் தளத்திலிருந்து

அழிக்கப்பட்ட தகவல்களை மீள வைக்க முடியாது என உறுதிப்படுத்தியிருந்தது. இந்தத் தரவுத் தள முறைமையின் செயற்பாடுகள் செயலிழக்கப்பட்ட பின்னர், தற்காலிக நடவடிக்கையாக கூகல் படிவத்தை (Google Form) பயன்படுத்தி மருந்துகள், உபகரணங்களின் பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும், அந்த முறை குறைபாடுகளுடன் இயக்கிச் செல்லப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(க) 2018 சனவரி 05 ஆந் திகதிய 2052/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியால் திருத்தப்பட்டு 2017 யூன் 14 ஆந் திகதிய 2023/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்த 2017 இன் 02, 03 மற்றும் 04 ஆம் இலக்க கட்டண பணிப்புரைகளின் படி மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் எல்லைக்கோட்டு உற்பத்திப் பொருட்களை தனிப்பட்ட முறையில் வழங்குவதற்காக பதிவுசெய்தலிலிருந்து விடுவிப்பதற்கு விண்ணப்பிக்கையில் கட்டணம் அறவிடப்பட வேண்டிய போதிலும், அதிகார சபையால் பதிவுசெய்தலிலிருந்து விடுவிப்பதற்கு அங்கீகாரம் வழங்குகையிலேயே கட்டணம் அறவிடப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டில் நிராகரிக்கப்பட்டிருந்த மருத்துவ உபகரணங்க ளின் பதிவுசெய்தலிலிருந்து விடுவிப்பதற்கான தனியார் துறையின் 207 விண்ணப்பங்களிற்காக அறவிடப்படக் கூடியதாகவிருந்த ரூபா 11,473,421 கட்டண வருமானம் அதிகார சபைக்கு இழப்பாகியிருந்தது. 2018 முதல் 2022 ஆகஸ்ட் 22 வரையான காலத்தில் மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் எல்லைக் கோட்டு உற்பத்திப் பொருட்கள் தொடர்பில் இவ்வாறு செயற்பட்டிருந்தமையால் அதிகார சபைக்கு கணிப்பிட முடியாத அளவுக்கு பாரிய வருமானம் இழப்பாகியிருந்தது.

(கா) 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்றிருந்த பல்வேறு குழுக்களில் பங்கு பற்றியமைக்கான படிகள், கொவிட் படிகள் மற்றும் ஊக்குவிப்புப் படிகள் என்ற வகையில் மொத்தம் ரூபா 629,030 தொகையினை நிதிப் பிரமாணம் 271(2)(அ) மற்றும் (ஆ) பிரகாரம் குறித்த உத்தியோ கத்தர்களிற்குச் செலுத்துவதற்கு அல்லது 14 நாட்களிற்குள் வங்கியில் வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது அதிகாரசபையின் கணக்காளரால் 159 முதல் 865 நாட்கள் வரை கைவசம் வைத்திருக்கப்பட்டிருந்தது. இந்தப் படிகளைச் செலுத்துவதற்காக தயாரிக்கப்பட்டிருந்த கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையால் அது தொடர்பில் வினாத்தொடுக்கையில் அதற்குப் பிந்திய தினமான 2022 யூன் 08 ஆந் திகதி ரூபா 629,030 தொகை நேரடியாக வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. அத்துடன், 2022 ஆம் ஆண்டில் குழுக்களில் பங்குபற்றியமைக்கான படிகள், ஊக்குவிப்புப் படிகள், வருகைப் படிகள் மற்றும் மேலதிக நேரப் படிகள் என்ற

வகையில் ரூபா 537,600 தொகை யினை குறித்த உத்தியோகத்தர்களிற்குச் செலுத்து வதற்கு அல்லது வங்கியில் வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 15 முதல் 228 நாட்கள் வரை கைவசம் வைத்திருக்கப்பட்டிருந்தமை 2022 ஆகஸ்ட் 23 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக காசுக் கணக்கெடுப்பின் போது உறுதிப்படுத்தப்பட்டது. இவ்வாறு அரசாங்க பணம் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், நிதிப்பிரமாணம் 271(1) இன் படி செலுத்தப்படாது எஞ்சியுள்ள பணத்தையும் அதனுடன் தொடர்புடைய ஆவணங்களையும் பெட்டகமொன்றில் அல்லது பாதுகாப்பான இடமொன்றில் வைக்கப்பட்டு பூட்டிடப்பட வேண்டிய போதிலும், இந்தப் பணம் கணக்காளரின் அலுவலக மேசையிலுள்ள இலாச்சில் பாதுகாப்பற்ற விதத்தில் வைக்கப்பட்டிருந்தது. மேலும் இரண்டு பூட்டுக்க ளுடன் கூடிய பாதுகாப்பான பெட்டகமொன்று தலைமை அலுவலக கட்டிடத்தில் பயன்பாடற்ற விதத்தில் வைக்கப்பட்டுள்ளது.

(கி) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகார சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை நிரந்தமான 235 பதவியணி யினரையும் ஒப்பந்த அடிப்படையிலான 22 நபர்களையும் உள்ளடக்கி 257 ஆகக் காணப்பட்டது. மொத்த உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை 160 ஆன போதிலும், அதிலுள்ள 38 நபர்கள் அங்கீகரித்த பதவியணியில் உள்ளடங்காத மேலதிக பதவியணியினராக காணப்பட்டமையால் 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கை 135 ஆகும்.

ஆங்கீகரித்த பதவியணியில் உள்ளடங்கியுள்ள உயர்மட்ட 19 முகாமைத்துவ பதவிகளில் 16 பதவிகள் அல்லது 84 சதவீதமானவை வெற்றிடமாகக் காணப்பட்டமையால் தேவையான மற்றும் தேவையற்ற பதவிகளை இனங்கண்டு அங்கீகரித்த ஊழியர்கோப்பை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், தேவையான பதவிகள் வெற்றிடமாகக் காணப்படு கின்றமையானது அதிகாரசபையின் ஒட்டு மொத்த செயலாற்றின் மீது தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளமை அவதானிக்கப்பட்டது. 30 மருந்துகளை மதிப்பீடுசெய்யும் உத்தியோகத் தர்கள் மற்றும் 12 உதவி மருந்துகளை மதிப்பீடுசெய்யும் உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பரிந்துரையின் படி உள்ளீர்ப்புச் செய்வதற்கோ அல்லது ஆட்சேர்ப்புச் செய்வதற்கோ இந்த அறிக்கையின் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ஒப்பம்: டபிள்யூ.பி.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

அத்தியாயம் - 4

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதன் செயலாற்றல் (SDG)

தேவைகள் மற்றும் ஆர்வங்கள் ஆகியவற்றின் மூலம் உலகளாவிய தனிநபர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதை சர்வதேச அபிவிருத்தி நோக்காகக் கொண்டுள்ளது. சுகாதாரம், கல்வி, சனநாயகம், நிலைத்திருப்புத்தன்மை மற்றும் பொருளாதாரம் போன்ற துறைகள் சார்ந்து மக்கள் அதிக வாய்ப்புகளுடன் மிகவும் சமத்துவமான வாழ்க்கையை சிறப்புற வாழ்ந்தாக வேண்டும். ஐக்கிய நாடுகள் தாபனம் அதன் UNDP மூலம், "வறுமையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும், புவியைப் பாதுகாப்பதற்கும், 2030 க்குள் அனைத்து மக்களும் அமைதி மற்றும் செழிப்பை அனுபவிப்பதை உறுதி செய்வதற்கு" நிலையான அபிவிருத்தி இலக்குகளை (SDG) செயல்படுத்துகிறது. வறுமை, எய்ட்ஸ் மற்றும் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான பாகுபாடு ஆகியவை 170 க்கும் மேற்பட்ட நாடுகள் மற்றும் பிராந்தியங்களில் தீர்க்கப்படுவதை உறுதிசெய்ய நாடுகள் செயல்பட்டு வருகின்றன.
17 இலக்குகளில், 3 ஆவது இலக்கு என்பது "சிறந்த ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு" ஆகும், மக்கள் ஆரோக்கியமான வாழ்க்கை வாழ்வதை உறுதிசெய்வதற்காக சிசு மரண வீதத்தைக் குறைத்து ஆயுட்காலம் அதிகரித்தல் வேண்டும். இது NMRA இன் நோக்கத்துடன் நெருக்கமாக தொடர்புடையதாக காணப்படுகின்றது.

அதன்படி, NMRA இன் அனைத்து செயல்பாடுகளும் வழிகாட்டப்பட்டபடி இந்த SDG 3 இன் இலக்குகளை அடைவதற்காக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன;

3.8 நிதி ஆபத்து பாதுகாப்பு, தரமான அத்தியாவசிய சுகாதார சேவைகளுக்கான அணுகல் மற்றும் அனைவருக்கும் பாதுகாப்பான, பயனுள்ள, தரமான மற்றும் மலிவு விலையில் அத்தியாவசிய மருந்துகள் மற்றும் தடுப்பூசிகளை அணுகுதல் உள்ளிட்ட உலகளாவிய சுகாதார தேவைகளை அடைதல்.

3.A அனைத்து நாடுகளிலும் புகையிலை கட்டுப்பாடு குறித்த உலக சுகாதார அமைப்பின் கட்டமைப்பு மாநாட்டை, பொருத்தமான முறையில் செயல்படுத்துவதை வலுப்படுத்துதல்.

3.B வளரும் நாடுகளை முதன்மையாக பாதிக்கும் தொற்று மற்றும் தொற்றாத நோய்களுக்கான தடுப்பூசிகள் மற்றும் மருந்துகளின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை ஆதரித்தல், TRIPS ஒப்பந்தம் மற்றும் பொது சுகாதாரம் குறித்த தோஹா பிரகடனத்தின்படி மலிவு விலையில் அத்தியாவசிய மருந்துகள் மற்றும் தடுப்பூசிகளுக்கான அணுகலை வழங்குதல். பொது சுகாதாரத்தைப் பாதுகாப்பதற்கான நெகிழ்வுத்தன்மைகள் தொடர்பான அறிவுசார் சொத்து உரிமைகளின் வர்த்தகம் தொடர்பான அம்சங்களுக்கான ஒப்பந்தத்தில் உள்ள விதிமுறைகளை முழுமையாகப் பயன்படுத்த வளரும் நாடுகளின் உரிமையை உறுதிப்படுத்தி, குறிப்பாக அனைவருக்கும் மருந்துகளுக்கான அணுகலை வழங்குதல்.

3.C சுகாதார நிதியுதவி மற்றும் வளரும் நாடுகளில், குறிப்பாக குறைந்த வளர்ச்சியடைந்த நாடுகள் மற்றும் சிறிய தீவுகளைக் கொண்ட வளரும் மாநிலங்களில் சுகாதாரப் பணியாளர்களின் ஆட்சேர்ப்பு, மேம்பாடு, பயிற்சி மற்றும் தக்கவைத்தல் ஆகியவற்றை கணிசமாக அதிகரித்தல்.

பாதுகாப்பு, தரம், செயல்திறன் மற்றும் விலை ஆகிய அம்சங்களில் மருந்துகள் மற்றும் மருத்துவ சாதனங்களை ஒழுங்குபடுத்துவதன் மூலம் இந்த இலக்குகள் அனைத்தும் NMRA இன் நோக்கத்தால் தீர்க்கப்படுகின்றன.

அத்தியாயம் - 5
இணக்கப்பாட்டு அறிக்கை

இல.	பிரகோகிகத்தக்க தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலவரம் (இணங்கப்பட்டது/ இணங்கப்படாதது)	இணங்கப்படாதிருப்பின் - அதற்கான சுருக்கமான காரணம்	இணங்கப்படாமையை தவிர்ப்பதற்கு எதிர்காலத்தில் எடுக்கக் கூடிய நடவடிக்கை தொடர்பான வளக்கம்
1	**பின்வரும் நிதிநிலை அறிக்கைகள் / கணக்குகள் சரியான நேரத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன**			
1.1	ஆண்டு நிதி அறிக்கைகள்	இணங்கப்பட்டது		
1.2	பொது அதிகாரிகளின் முன்கூட்டிய கணக்குகள்	இணங்கப்பட்டது		
1.3	வணிக மற்றும் தயாரிப்பு முன்கூட்டிய கணக்குகள் (வணிக முன்கூட்டிய கணக்கு	-		
1.4	முன்கூட்டியே கணக்குகளை சேமிக்கவும்	-		
1.5	சிறப்பு முன்கூட்டியே கணக்குகள்	இணங்கப்பட்டது		
1.6	மற்றவை	-		
2	**புத்தகங்கள் மற்றும் ஆவணங்களை பராமரித்தல் (குசு 445)**			
2.1	பொது நிர்வாக சுற்றறிக்கை எண் 267.∴2018 இன் படி நிலையான சொத்து பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணங்கப்பட்டது		
2.2	தனிப்பட்ட ஊதிய ஆவணங்கள் ∴ தனிப்பட்ட ஊதிய அட்டைகளைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணங்கப்பட்டது		
2.3	தணிக்கை வினவல்களின் பட்டியலைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணங்கப்பட்டது		
2.4	உள் தணிக்கை பதிவை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணங்கப்பட்டது		

2.5	அனைத்து மாதாந்திர கணக்குச் சுருக்கங்களையும் தயாரித்து, அவற்றை சரியான நேரத்தில் கருவூலத்தில் சமர்ப்பித்தல்	இணங்கப்பட்டது		
2.6	காசோலை மற்றும் பண ஆர்டர் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணங்கப்பட்டது		
2.7	சரக்குகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணங்கப்பட்டது		
2.8	பங்கு சரக்குகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணங்கப்பட்டது		
2.9	இழப்பு மற்றும் சேதம் குறித்த பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணங்கப்பட்டது		
2.10	பொறுப்புகளின் பட்டியலை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணங்கப்பட்டது		
2.11	துணை தாள் புத்தக பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் (புயு-C20)	இணங்கப்பட்டது		
3	**நிதிக் கட்டுப்பாட்டிற்கான செயல்பாட்டின் பிரதிநிதித்துவம்**			
3.1	நிறுவனத்திற்குள் நிதி அதிகாரங்களை வழங்குதல்	இணங்கப்பட்டது		
3.2	நிதி அதிகாரங்களை வழங்குவது பற்றி நிறுவனத்திற்கு தெரியப்படுத்தியிருக்க வேண்டும்	இணங்கப்பட்டது		
3.3	இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அதிகாரிகள் ஒவ்வொரு பரிவர்த்தனைக்கும் ஒப்புதல் அளிக்கக்கூடிய அதிகாரத்தை வழங்குதல்	இணங்கப்பட்டது		
3.4	11.05.2014 தேதியிட்ட அரசு கணக்கு சுற்றறிக்கை எண்.171.்.204 இன் படி அரசு ஊதிய மென்பொருள் தொகுப்பைப் பயன்படுத்துவதில் கணக்காளரின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுதல்	பொருத்தமற்றது		

4	**வருடாந்திர செயல் திட்டம் தயாரித்தல்**			
4.1	வருடாந்திர செயல் திட்டம் தயாரித்தல்	இணங்கப்பட்டது		
4.2	ஆண்டு உள் தணிக்கைத் திட்டத்தைத் தயாரித்தல்	இணங்கப்பட்டது		
4.3	வருடாந்திர மதிப்பீட்டைத் தயாரித்து, உரிய தேதியில் பொது நிறுவனத் துறையிடம் சமர்ப்பித்தல்	இணங்கப்பட்டது		
4.4	ஆண்டு பணப்புழக்க அறிக்கையை கருவூல செயல்பாட்டுத் துறைக்கு சரியான நேரத்தில் சமர்ப்பித்தல்	இணங்கப்பட்டது		
5	**தணிக்கை குவாரிகள்**			
5.1	ஆடிட்டர் ஜெனரலால் குறிப்பிடப்பட்ட அனைத்து தணிக்கை வினாக்களுக்கும் அவரால் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடு தேதியில் பதிலளித்த பிறகு	இணங்கப்பட்டது		
6	**உள்துறை தணிக்கை**			
6.1	னுஆயு.்.1-2019-குசு 134(2) இன் படி ஆண்டின் தொடக்கத்தில் ஆடிட்டர் ஜெனரலுடன் கலந்தாலோசித்த பிறகு உள் தணிக்கைத் திட்டத்தைத் தயார் செய்தல்	பொருத்தமானது - செய்யப்படவில்லை		அமுல்படுத்த திட்டமிடப்பட்டது
6.2	ஒவ்வொரு உள் தணிக்கைக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதிலளித்த பிறகு	பொருத்தமானது - செய்யப்படவில்லை		அமுல்படுத்த திட்டமிடப்பட்டது
6.3	2018 ஆம் ஆண்டின் தேசிய தணிக்கைச் சட்டம் எண்.19 இன் துணைப் பிரிவுகள் -40 (4) இன் அடிப்படையில், அனைத்து உள் தணிக்கை அறிக்கைகளின் நகல்களையும் தணிக்கை	பொருத்தமானது - செய்யப்படவில்லை		அமுல்படுத்த திட்டமிடப்பட்டது

	மேலாண்மைத் துறைக்கு சமர்ப்பித்தல்			
6.4	நிதி ஒழுங்குமுறைகள் 134(3) இன் படி அனைத்து உள் தணிக்கை அறிக்கைகளின் நகல்களையும் ஆடிட்டர் ஜெனரலுக்கு சமர்ப்பித்தல்	பொருத்தமானது - செய்யப்படவில்லை		அமுல்படுத்த திட்டமிடப்பட்டது
7	**தணிக்கை மற்றும் மேலாண்மை குழுக்கள்**			
7.1	னுஆயு சுற்றறிக்கை எண் 1-2019 இன் படி தொடர்புடைய ஆண்டில் குறைந்தது 04 தணிக்கை மற்றும் மேலாண்மை குழுக்களை நடத்தியிருக்க வேண்டும்	இணங்கப்பட்டது		
8	**சொத்து மேலாண்மை**			
8.1	சொத்து மேலாண்மை சுற்றறிக்கை எண் 01.்.2017ன் அத்தியாயம் 07ன் படி, சொத்துக்களை கையகப்படுத்துதல் மற்றும் அகற்றுதல் பற்றிய தகவல்களை, கட்டுப்பாட்டாளர் ஜெனரல் அலுவலகத்திற்கு சமர்ப்பித்தல்	இணங்கப்பட்டது		
8.2	மேற்கூறியவற்றின் 13வது அத்தியாயத்தில் அந்த சுற்றறிக்கையின் விதியை செயல்படுத்த ஒருங்கிணைப்பதற்காக ஒரு ஒருங்கிணைப்பு அதிகாரியை நியமித்து, அந்த அதிகாரி பற்றிய தகவலை பொதுக் கட்டுப்பாட்டாளர் அலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும்.	இணங்கப்பட்டது		
8.3	பொது நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 05.்.2016 க்கு இணங்க கணக்கெடுப்பு வாரியம் நடத்தி உரிய அறிக்கைகளை கணக்காய்வாளர் நாயகத்திற்கு	பொருத்தமானது - செய்யப்படவில்லை		அமுல்படுத்த திட்டமிடப்பட்டது

	உரிய தேதியில் சமர்ப்பித்திருக்க வேண்டும்.			
8.4	சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியில் வருடாந்திர கணக்கெடுப்பு வாரியத்தில் வெளிப்படுத்தப்பட்ட அதிகப்படியான, குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகளை செய்திருக்க வேண்டும்.	பொருத்தமானது - செய்யப்படவில்லை		அமுல்படுத்த திட்டமிடப்பட்டது
8.5	குசு 772 இன் அடிப்படையில் பயன்படுத்த முடியாத பொருட்களை அப்புறப்படுத்துதல்	பொருத்தமானது - செய்யப்படவில்லை		அமுல்படுத்த திட்டமிடப்பட்டது
9	**வாகன மேலாண்மை**			
9.1	பூல் வாகனங்களுக்கான தினசரி இயங்கும் விளக்கப்படங்கள் மற்றும் மாதாந்திர கோடைகால அறிக்கைகளைத் தயாரித்து, அவற்றை உரிய தேதியில் ஆடிட்டர் ஜெனரலுக்கு சமர்ப்பித்தல்	இணங்கப்பட்டது		
9.2	06 மாத காலத்திற்குக் குறையாமல், சேவை செய்ய முடியாத வாகனங்கள் பதற்றமடையும் போது, அப்புறப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.	இணங்கப்பட்டது		
9.3	வாகனங்களின் பதிவு உள்ளீட்டைப் பராமரித்தல் மற்றும் புதுப்பித்தல்	இணங்கப்பட்டது		
9.4	ஒவ்வொரு வாகன விபத்துக்கும் குசு 103,104,109 மற்றும் 110ன் படி நடவடிக்கை எடுத்தல்	இணங்கப்பட்டது		
9.5	29.12.2016 தேதியிட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை எண்.2016.˙.30 இன் பத்தி 3.1 இன் விதிகளின்படி வாகனங்களின்	இணங்கப்பட்டது		

	எரிபொருள் எரிப்பை மீண்டும் ஆய்வு செய்தல்			
9.6	குத்தகைக் காலத்திற்குப் பிறகு குத்தகைக்கு விடப்பட்ட வாகனங்களின் பதிவு புத்தகங்களின் முழு உரிமையையும் எடுத்துக் கொள்ளுதல்	இணங்கப்பட்டது		
10	**வங்கி கணக்கு மேலாண்மை**			
10.1	வங்கி சமரச அறிக்கைகளை உரிய தேதியில் தயாரித்து சான்றளித்து தணிக்கைக்கு சமர்ப்பித்திருக்க வேண்டும்	இணங்கப்பட்டது		
10.2	மதிப்பாய்வு செய்யும் ஆண்டின் போது அல்லது அதற்கு முன் கொண்டுவரப்பட்ட செயலற்ற வங்கிக் கணக்குகளைத் தீர்த்திருக்க வேண்டும்	இணங்கப்பட்டது		
10.3	வங்கி நல்லிணக்க அறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட்ட நிலுவைகள் தொடர்பான நிதி விதிமுறைகளுக்கு இணங்கச் செயல்பட்டு, அந்த நிலுவைகளை ஒரு மாத காலத்திற்குள் செலுத்தியிருக்க வேண்டும்.	இணங்கப்பட்டது		
11	**நிதி பயன்பாடு**			
11.1	ஏற்படுத்தப்பட்ட ஒதுக்கீட்டை விட அதிகமாகச் செலவு செய்யாதது	இணங்கப்பட்டது		
11.2	பிரிவு 94 (1)இன்படி வழங்கப்பட்டுள்ள ஏற்பாட்டைப் பயன்படுத்திய பிறகு ஆண்டின் இறுதியில் பொறுப்புகளை அடைதல், வரம்பை மீறக்கூடாது	இணங்கப்பட்டது		
12	**பொது அதிகாரிகளின் முன்கூட்டிய கணக்குகள்**			
12.1	வரம்புகளுடன் இணங்குதல்	இணங்கப்பட்டது		

12.2	நிலுவையில் உள்ள கடன் நிலுவைகளின் வயது பகுப்பாய்வு செய்தல்	இணங்கப்பட்டது		
12.3	ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடனைத் தீர்த்திருக்க வேண்டும்	இணங்கப்பட்டது		
13	**பொது வைப்பு கணக்கு**			
13.1	காலாவதியான வைப்புத்தொகை தொடர்பாக குசு 571-ன் படி செயல்பட்டிருக்க வேண்டும்	இணங்கப்பட்டது		
13.2	பொது வைப்பு கணக்குகளுக்கான கட்டுப்பாட்டு கணக்கை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணங்கப்பட்டது		
14	**இம்ப்ரெஸ்ட் கணக்கு**			
14.1	பரிசீலனைக்கு உட்பட்ட ஆண்டின் இறுதியில், கருவூல செயல்பாட்டுத் துறைக்கு பணப் புத்தக இருப்பை அனுப்பியிருக்க வேண்டும்.	இணங்கப்பட்டது		
14.2	குசு 371 இன் கீழ் வழங்கப்பட்ட இடைக்காலத் தடை, குறிப்பிட்ட வேலை முடிந்த ஒரு மாதத்திற்குள் தீர்வு காணப்பட்டது	இணங்கப்பட்டது		
14.3	குசு 371 இன் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாத வகையில் தற்போது இடைக்கால தடையை வழங்கியுள்ளது	இணங்கப்பட்டது		
14.4	மாதந்தோறும் கருவூலப் புத்தகத்துடன் இம்ப்ரெஸ்ட் கணக்கின் இருப்பை சமரசம் செய்தல்	இணங்கப்பட்டது		
15	**வருவாய் கணக்கு**			
15.1	தொடர்புடைய விதிமுறைகளின்படி சேகரிக்கப்பட்ட வருமானத்திலிருந்து திருப்பிச் செலுத்தியிருக்க வேண்டும்	இணங்கப்பட்டது		

15.2	சேகரிக்கப்பட்ட வருவாயை டெபாசிட் கணக்கில் டெபாசிட் செய்யாமல் நேரடியாக வருவாய் வருமானத்தில் வரவு வைத்தல்	இணங்கப்பட்டது		
15.3	குசு 176 இன் படி நிலுவையில் உள்ள வருவாய் அறிக்கைகளை ஆடிட்டர் ஜெனரலுக்கு சமர்ப்பித்த பிறகு	இணங்கப்பட்டது		
16	**மனித வள மேலாண்மை**			
16.1	அங்கீகரிக்கப்பட்ட கேடர் வரம்புக்குள் பணியாளர்களை பராமரித்தல்	இணங்கப்பட்டது		
16.2	அனைத்து ஊழியர்களுக்கும் எழுத்துப்பூர்வமாக கடமை பட்டியலை வழங்கியிருக்க வேண்டும்	இணங்கப்பட்டது		
16.3	ஆளுனு சுற்றறிக்கை எண் அடிப்படையில் அனைத்து அறிக்கைகளையும் மேலாண்மை சேவைகள் துறைக்கு சமர்ப்பித்தல். 04.'.2017 தேதி 20.09.2017	இணங்கப்பட்டது		
17	**பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குதல்**			
17.1	தகவல் அறியும் உரிமைச் சட்டம் மற்றும் விதிமுறைகளின்படி ஒரு தகவல் அதிகாரியை நியமித்தல் மற்றும் ஆவணத்தைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் ஆகியவை வழங்கப்பட்ட தகவல்களைக் கொண்டவை.	இணங்கப்பட்டது		
17.2	நிறுவனத்தைப் பற்றிய தகவல்களை அதன் இணையதளம் மூலம் வழங்குதல் மற்றும் பொது மக்கள் தங்கள் கருத்துக்களை.'.குற்றச்சாட்டுகளை, இணையதளம் அல்லது மாற்று	இணங்கப்பட்டது		

	வழிகள் மூலம் பதிவு செய்ய வசதிகளை செய்தல்			
17.3	தகவல் அறியும் உரிமைச் சட்டம் பிரிவு 8 மற்றும் 10ன் படி வருடத்திற்கு இரண்டு முறை அல்லது ஒரு முறை அறிக்கை சமர்ப்பித்திருக்க வேண்டும்	இணங்கப்பட்டது		
18	**குடிமக்கள் சாசனத்தை செயல்படுத்துதல்**			
18.1	பொதுநிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கை எண்.05.்.2018 மற்றும் 05.2018 (1) ஆகியவற்றின் விதிகளின்படி குடிமகன்.்.வாடிக்கையாளரின் சாசனத்தை உருவாக்கி செயல்படுத்தியிருக்க வேண்டும்.	இணங்கப்பட்டது		
18.2	அந்த சுற்றறிக்கையின் பத்தி 2.3ன் படி, குடிமக்கள்.்.வாடிக்கையாளர்களின் சாசனத்தைத் தயாரித்தல் மற்றும் செயல்படுத்துதல் ஆகியவற்றைக் கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நிறுவனத்தால் ஒரு வழிமுறை உருவாக்கப்பட்டிருக்க வேண்டும்.	இணங்கப்பட்டது		
19	**மனித வளத் திட்டத்தைத் தயாரித்தல்**			
19.1	24.01.2018 தேதியிட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை எண்.02.்.2018 இணைப்பு 02 இன் அடிப்படையில் மனித வளத் திட்டத்தைத் தயாரித்தல்	இணங்கப்பட்டது		
19.2	மேற்கூறிய மனிதவளத் திட்டத்தில், ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஆண்டுக்கு குறைந்தது 12	இணங்கப்பட்டது		

	மணிநேர பயிற்சியை உறுதி செய்திருக்க வேண்டும்.			
19.3	மேற்கூறிய சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள வடிவமைப்பின் அடிப்படையில் முழு ஊழியர்களுக்கும் வருடாந்திர செயல்திறன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருக்க வேண்டும்.	பொருத்தமானது - செய்யப்படவில்லை		அமுல்படுத்த திட்டமிடப்பட்டது
19.4	மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5 வது பத்தியின்படி திறன் மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்தும் மனித வள மேம்பாட்டுத் திட்டம், திறன் மேம்பாட்டுத் திட்டங்களைத் தயாரிக்கும் பொறுப்பில் மூத்த அதிகாரியை நியமித்திருக்க வேண்டும்.	இணங்கப்பட்டது		
20	**தணிக்கை கேள்விகளுக்கு பதிலளித்தல்**			
20.1	கடந்த ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் தணிக்கை பத்திகளில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்து	இணங்கப்பட்டது		

_____-